செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௮ தை (Feb. '77) [பரல் - ௬

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ൫൧	திருவள்ளுவர் ஆண்டு உ००௸, தை பிப்ருவரி 1977	பரல் ௬

அடிகளார்க்கு ஒரு நூற்றுண்டு! அருந்தமிழ்ச் செல்விக்கு அரை நூற்றுண்டு

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,]

மறைமலை இமயமலை :

தமிழ் வாழ, தமிழ் இனம் வாழ, தமிழர் நாடு வாழத் தம்முடைய வாழ்நாளையெல்லாம் ஆக்கிய தமிழ்ப் பேரிமயமலை மறைமலையடிகள் ஆவர் ; ஆம். ''பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே'' என்று பாடும் சங்க இலக்கியப் பொன்வரி ஒன்றே நம் சிந்தனையில் அடிகளைப்பற்றி எண்ணும்போது எழுகின்றது. அடிகள் தன்னேரில்லாத் தமிழ் ஞாயிறு; தென்றிசையின் பெருமை திசையனைத்தின் பெருமையிலே சிறந்து ஓங்கவேண்டுமென்று விழைந்த செந்தமிழ் இமயம் உறங்கிக் கிடந்த தமிழினத்திற்கு விழிப்பூட்ட வந்த பைந்தமிழ்ப் பகவலன் அடிகள். அடிகளை அவ்வப்போது நினைவிற் கொண்டுவந்து தம் இயல்பாகிய சோம்பரைப் போக்கிக் கொண்டு சுறுசுறுப்புடன் தம் வாழ்வை இயக்கிக்கொள்ள வேண்டியது தமிழ் மக்கள் கடமை. இதற்கொரு சீரிய வாய்ப்பினைத் தமிழகத்தின் பழம்பெரும் நிறுவனமாகிய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இத் திங்களில் தந்தது ; ஆம் ; 'மறைமலையடிகள் நூற்றுண்டு விழா'வைத் தமிழ் மக்களுக்கு உணர்ச்சியூட்டும் ஒரு பெருவிழாவாகக் கழகம் கொண்டாடி மகிழ்ந்தது ; தமிழ் கூறு நல் உலகையெல்லாம் மகிழ வைத்தது.

ஒரு நூற்றண்டும் அரை நூற்றண்டும்:

இந்த விழாவிற் புதுமையாக மற்றொரு பெருவிழாவும் இணைந்தது. ஐம்பதாண்டுக் காலமாகத் தமிழகத்தின் மொழி வரலாருக—மொழிக்காப்பு அரணுக—செந்தமிழ் அறிஞரது சிந்தனைக் கருவூலமாக—விளங்கிவரும் செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழாவே அது. மறைமலையடிகளாரின் மாணவராகிய திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்களை முதல் இத ழாசிரியராகக் கொண்டு, 1923 ஆம் ஆண்டிற் பிறந்த செல்வி, ஐம்பது சிலம்புகளைத் தமிழகத்திற்கு அளித்துள்ள அருங்கலைச் செல்வி; ஐம்பத்தோராவது சிலம்பை இப்போது ஒலித்துக் கொண்டிருக்கும் அருட்செல்வி இவள். செந்தமிழ் நெறியையும் சிவநெறியையும் தன் இரு கண்களாகக் கொண்டு பணியாற்றி வரும் செல்வியின் பொன்விழாவும் (அரை நூற்றுண்டு விழாவும்) இவ்விழாவுடன் இணைந்து கொண்டாடப் பெற்றமை தமிழ் மக்கட்கு அருவிருந்தாக அமைந்தது என்று கூறலாம்.

விழாக்குழு அமைப்பு:

இவ்விருவிழாக்களுக்கும் நிகழ்முறைச் செயற்பாட்டிற்கு ஏற்றபடி ஓர் அறிஞர்குழு மேனாள் சென்னை உயர் அறமன்ற மாநடுவர். உயர்திரு எஸ். மகராசன் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கிவந்தது. அதன்கண் அமைந்த அறிஞர்கள் இமயமுதற் குமரிவரை உள்ள நம் இந்தியப் பெருநாட்டின் பல் வேறு பகுதிகளில் வாழ்ந்து தமிழ்ப்பணி புரிந்துவரும் வித்தகர் ஆவர்.

'எண்பதாண்டான இளைஞ'ரின் ஏற்பாடுகள்:

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்ற மாபெரும் நிறுவனத்தைத் தொடக்கமுதல் வளர்த்து வரும் தூயோரும், இதன் இன்றைய மாண்புறு நிலைக்கு உறுதுணையாளரும், 'எண்பதாண்டாகிய இளைஞ'ரும், பவளவிழாக் கண்ட பைந்தமிழ்ச் செலவரும் ஆகிய பெரியவர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் இவ்விருவிழாககளையும் தமிழகமே வியக்கும் வண்ணம் சிறப்புறத் தக்க ஏற்பாடுகளைச் செய்யலாயினர். கடமையைக் கண்ணெனப் போற்றும் கழகப் பொது மேலாளர் திரு. இரா. கல்யாணசுந்தரம், பி எஸ்ஸி. அவர் களும், மறைமலையடிகளார் நூல்நிலைய நூலகரும் செயற்றிறம் மிகக செந்நெறியாளருமான திரு. இரா. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ., பி.லிப்., அவர்களும், விழா ஏற்பாடுகளை ஒரு குறைவும் வாராவண்ணம் நன்கு பேணிக் காத்துநின்றனர்.

மலர் வெளியீடு :

பேரறிஞர்கள், பெரும்புலவர்கள் முதலியோர் வழங்கிய வாழ்த்துரைகளையும் கருத்துரைகளையும் தாங்கிய மறைமலையடிகள் நூற்றாண்டு விழாமலர், செந்தமிழ்ச் செல்வி பொன் விழாமலர் ஆகிய இரண்டு நறுமண மலர்கள் அழகுற அச்சிடும் பணியும் தொடங்கி நிறைவேறிவரலாயிற்று. அடிகள் நூற்றாண்டு விழாவையும் செல்வியின் பொன்விழாவையும் ஒட்டிக் கழகம் சில புதிய வாய்ப்புகளைத் தமிழக நேயர்களுக்கு வழங்கி அறிவிப்புச் செய்தது. ஆம்; *10—2—77 வரை அடிகளார் அருளிய நூல்களை ஐம்பது ரூ. வரை வாங்குபவர்க்கு 15 விழுக்காடும், அதற்குமேல் வாங்குபவர்க்கு பத்து விழுக்காடு கழிவும் தருவதாக அறிவித்து மகிழ்ச்சியில் ஆழ்த்திற்றுக் கழகம்; அம்மட்டோ? செந்தமிழ்ச் செல்விக்கு வாழ்நாள் கையொப்பமாக ரூ. 120/= உள்ளது. †10—2—77க்குள் கையொப்பம் வழங்குவோர்க்குரிய வாழ்நாட் கட்டணம் ரூ.101/= மட்டுமே என்று அறிவித்துத் தமிழ் அன்பர்கட்கு ஓர் இனிய புதிய வாய்ப்பைத் தந்தது. ஆயிரம் பேராவது வாழ்நாட் கையொப்பம் தந்து செல்விக்கு மேலும் சிறப்புறு வாழ்வைத் தரவேண்டும் என்று விரும்பும் கழக விருப்பம் இவ்வாறு நல்விழாவில் நலம் சிறக்க வெளிவந்தது.

மற்றுமொரு விழா வாய்ப்பு :

கழகம் மேலும் ஒரு வாய்ப்பினை விழாக் காணவந்தோர்க்கு வழங்கியிருந்தமை இங்குக் குறித்திடவேண்டுவதாகும். மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா மலர் (ரூ. 10) செந்தமிழ்ச் செல்வி பொன்விழா மலர் (ரூ. 7-50) இரண்டு நூல்களையும் விழா மண்டபத்தில் வாங்குவோர்க்கும், ‡10—2—77க்குள் கட்டளை அனுப்பிவைப்போர்க்கும் குறைந்தவிலையில் (ரூ. 12-50) தருவதாக அறிவித்திருந்தது கழகம். பல தமிழ் அன்பர்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர் என்று குறிப்பிட வேண்டியதில்லை. ஆங்கில நூல் வெளியீட்டாளர்கள் இவ்வாறு சில வாய்ப்புக்களை வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே. நூற்கட்டடம் செய்வதிலும், அச்சிடுவதிலும், அழகுற முடிப்பதிலும் தனிப்புகழ் பெற்றுள்ள கழகம் இத் துறையிலும் தனித்திறன் வாய்ந்து திகழ்தல் குறிப்பிடத்தக்கது.

விழாத் தொடக்கம் :

சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 28—1—77 வெள்ளியன்று அடிகள் நூற்றாண்டு விழா கொண்டாடப்பெற்றது.

---

* † ‡ காலவரையறை 28-2-77க்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

விழாக் கோலம் பூண்டிருந்தது திருமண மண்டபம். ஆம்; சென்னைவாழ் தமிழ் அன்பர்கள், தமிழ் அறிஞர்கள், பல்வேறு தொழிலில் ஈடுபட்ட அறச்செல்வர்கள், தாய்க்குலத்தோர் அனைவரும் குறித்த நேரத்திற்கு முன்பே திரளலாயினர். அடிகளார் பற்றிய அருஞ்சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும் என்ற அரிய ஆர்வம் ஒவ்வொருவர் முகத்தும் சுடர்வீசிக் கொண்டிருந்தது. அடிகளார்க்குச் செலுத்தும் ''ஞானவழிபாடு'' அவர் நூல்களைச் சிந்தித்தலும் கேட்டலுமேயன்றோ?

புத்தகக் காட்சி :

மறைமலையடிகளார் தம் கைப்பட எழுதிய கையெழுத்துப் படிகள், நாட்குறிப்புகள், அவர் சேர்த்து வைத்திருந்த அரிய நூல்கள், அவர் தம் அழகிய திருவுருவம் காட்டும் பல்வேறு படங்களைக் கொண்டிருந்த கண்காட்சி ஒன்றும் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்தது. விழாப்பந்தல் முகப்பில் கழக வெளியீடுகள்—கண்கவர் வண்ணத்தொடு கட்டடம் செய்யப்பட்ட நூல்கள் விற்பனைக்கு உரியனவாக இருந்தன. வரும் அன்பர்கள் நூல்களை வாங்கும் நிலையில் ஈடுபட்டுப் பேரின்பம் கண்டனர். பலர் அடிகளார் கண்காட்சிக்குச் சென்று கண்டு களிகூர்ந்தனர். மறைமலையடிகளாரது 'முத்துக் கோத்தன்ன' தமிழ், ஆங்கில எழுத்துக்கள் பட்டொளி வீசக் கண்டு மகிழ்ந்தனர். இக் காலத்தே கவினுற எழுதும் கையெழுத்து இளைஞரிடத்தே மறைந்து வருகிறதே என்று மனம் கசிந்தோரும் உண்டு.

பொன்னம்பலக் கூத்தன் புன்னகைக் காட்சி:

விழா மேடை அழகிய கோலம் பூண்டிருந்தது. பொன்னம்பலக் கூத்தனது திருவுருவம் மேடையில் பெரிய நிலையில் தக்க ஒளியமைப்புடன் விளங்கிற்று; 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்புடனும்' கூத்தப்பிரான் தன் செல்வக் குழந்தையாகிய அடிகளுக்கு எடுக்கும் அருவிழாவைக் காண 'மும்மடங்கு பொலிந்த முகத்தனனாய்' நிற்றல் போன்று இக் காட்சி உணர்வுடையார் மனத்தே ஓர் ஓவியத்தை உருவாக்கிற்று. 'ஏழில்' இசை மேடையில் தக்க கலைஞர்களைக் கொண்டு இசை வெள்ளத்தைப் பரப்பிற்று. கூடியிருந்தோர் நெஞ்சிலெல்லாம் 'பண் கலந்த நினைவு' (musical thought) அழகுற எழுந்து இலக்கியச் சூழ்நிலை ஒன்று மெல்ல மெல்ல உருவாயிற்று. ஆம்; பண்பட்ட சூழலில் அன்றோ இலக்கிய வித்து முளைத்துத் தழைக்கும்!

மேடையில் வீற்றிருந்த மேதகவினர் :

ஆறு மணியளவில் விழாவிற் பங்குகொள்ளும் தகைமை சான்ற திருவினோர் அனைவரும், தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களும், பொது மேலாளர் திரு. இரா. கல்யாண சுந்தரம் அவர்களும் அழைத்துச் செல்ல மேடையில் ஏறி வீற்றிருந்தனர். சென்னைச் சட்டமன்றத் தலைவர் மாண்பு மிகு புலவர் திரு. கா. கோவிந்தன் அவர்கள் அவை நடுவண் தலைவராக வீற்றிருந்தனர். அவர்தம் இடப்பால் சென்னை உயர் அறமன்ற மாநடுவர் திருவாளர் மோகன் அவர்களும், வலப்பால் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் மகிழ்வுடன் தோற்றம் அளித்தனர். மேனாள் உயர் அறமன்ற மாநடுவர் திருவாளர். மகராசன் அவர்களும், தமிழக அரசின் கல்வித்துறைச் செயலர் அவர்களும் முதல்வரிசையின் இரு விளிம்பிலும் அமர்ந்திருந்தனர். இத் தலைவர்கட்குப் பின்னர், திருக்குறள்பீடம் தவத்திரு அழகரடிகள், திரு. ந. ரா. முருகவேள், டாக்டர் திரு. சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் திரு. அவ்வை நடராசன், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன், திரு. கோவை இளஞ்சேரன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

இறைவணக்கத்திலே இனிமை :

திருமதி. சாரதா நம்பியாரூரன் அவர்கள் பாடிய இறைவணக்கத்தில் 'தமிழோடு இசை' கலந்து நறுமணம் பரப்பிற்று. அடிகளார் பாடிய கவிதை வரிகளையும் மனம் உருகி அவ்வம்மையார் தம் இனிய குரலில் பாடி நெஞ்சையெல்லாம் உருக்கினர். வடலூரடிகள் பாடிய "பெற்றதாய்தனை மகமறந்தாலும்" என்ற திருவைந்தெழுத்துத் திறம் விரிக்கும் திருப்பாட்டு அம்மையாரது மென்குரலொடு குழைந்து திருவைந்தெழுத்து உள்ளுணர்வை நெஞ்செலாம் பரப்பிய போதே விழா 'களைகட்டி' விட்டது.

வரவேற்புரை :

அடுத்து, மேனாள் மாநடுவர் திரு. எஸ். மகராசன் அவர்கள் தமக்கே உரிய இனிய நகைச் சுவையும், சிந்தனைத் திறம் தூண்டும் போக்கும் கொண்ட வரவேற்புரை ஒன்றை நிகழ்த்தினார்கள். அடிகளார் தாய்த்தமிழின்மீது கொண்ட பற்று வேற்றுமொழி வெறுப்பாக விளைந்ததில்லை என்பதும், அடிகளாருடைய அழகிய சாகுந்தல மொழிபெயர்ப்பும், ஆங்கில முன்னுரைகளுமே இதற்குச் சான்றுபகரும் என்பதும், அடிகளார் முந்நூறு வெண்பொற் காசுகள் பெற்றுப் பேருரை யாற்றியவர் என்பதும், அத்தகு கருத்தாழம் உடையன அவர்தம்

பேருரைகள் என்பதும், அவர்களது நூற்றாண்டு விழா அடிகட்கு நாம் செய்யத்தக்க கடப்பாட்டுப் பெருவிழா என்பதும் அவர்களது வரவேற்புரையில் வெளிப்பட்ட அருங்கருத்துகள். கழகத்தைத் தொடக்கிய திரு. வ. திருவரங்கனர் அவர்களது படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய அவர்களது பேச்சு, அடிகளார் எவ்வாறு எத் துறையினரும் பாராட்டத்தக்க ஏற்றம் பெற்றிருந்தார்கள் என்பதை அங்கை நெல்லியெனத் தெளிவாக்கிற்று.

தொடக்கவுரை திறம் :

அடுத்து உயர் அறமன்ற மாநடுவர் திரு. எஸ். மோகன் அவர்களது தொடக்கவுரை. நல்ல தமிழில் அடிகளாரது வரலாற்றைத் தொடர்புபடுத்தி, அவர்களுடைய பனுவல்கள் பலவற்றையும் அறிமுகப் படுத்திப் பேசினர்கள்.

புலவர் பொன்னுரை :

தலைமைப் பேருரையில் மாண்புமிகு புலவர் திரு. கா. கோவிந்தன்அவர்கள் மிக உருக்கமாக அடிகளாரின் அரும்பணிகளை விளக்கி, மொழிப்போராட்டத்தில் மறைமலையடிகளார் செய்த திருப்பணி அளப்பரியது என்று குறிப்பிட்டார்கள். தம்முடைய இளமைக் காலத்தே அடிகளாரைப் பல்லாவரத்திற் கண்டு தம் சிற்றூர்க்குச் சொற்பொழிவாற்ற அழைத்தபோது தாம் கண்ட அடிகளாரின் கண்டிப்பும், இன்முகமும், இனிய போக்கும் பற்றி விளக்கிப் பேசினர்கள். ''மறைமலையடிகளார் தனிமனிதர் அல்லர்: ' தனித்தமிழ் இயக்கம்'' என்ற தெளிவு புலவரவர்களின் பொன்னுரையில் ஒளிர்ந்தது.

கல்வித்துறைச் செயலர் கருத்துரை :

தமிழகவரசு கல்வித் துறைச் செயலர் திரு. அரங்கபாஷ்யம் அவர்கள் மலரை வெளியிட்டு எதிர்பாராத வகையில் அழகான ஆங்கிலத்தில் தம்முடைய பேருரையை நிகழ்த்தத் தொடங்கினர்கள். அதற்கான காரணத்தை அவர்கள் விளக்கும்போது, அடிகளாரது ஆங்கிலப் புலமையைச் சுட்டிக் காட்டி அதனல் ஆங்கிலத்திற் பேசுவது அடிகளார் திருவுள்ளத்திற்குப் பெரிதும் பொருந்துவதே என்று கூறிப் பல்வேறு திறங்களில் அடிகளார் சிறப்புகளை விளக்கினர்கள்.

பாராட்டுரைகள் :

அடுத்து டாக்டர். அவ்வை நடராசன் அவர்கள், டாக்டர். சொ. சிங்காரவேலன் அவர்கள், டாக்டர். சி. பாலசுப்பிர

மணியம் அவர்கள், திரு. ந. ரா. முருகவேள் அவர்கள், திருக்குறள் பீடம் தவத்திரு அழகரடிகள் அவர்கள் ஆற்றிய உரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அடிகளாருடைய வாழ்வையும் வாக்கையும் நோக்குவனவாக இருந்தன. அவ்வப்போது அவையிலுள்ளோர் தம் பாராட்டுதல்களைத் தம் கையொலிகளாற் குறிப்பித்தனர். இறுதியாகத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் பாராட்டுரை அமைந்தது. அடிகளாருடைய முற்போக்குக் கொள்கைகளை விளக்கி, அன்னாரின் சமயப் பணியின் திட்ப நுட்பங்களை நிறுவிய நிலையில் அவர்களது அருளுரை ஒரு மதிப்பீட்டுப் பேருரையாகவே அமைந்திருந்தது.

தொண்டர்களுக்குப் பாராட்டு :

தவத்திரு. அழகரடிகள், திரு. மறை. திருநாவுக்கரசு (அடிகளாரின் மகனார்) திரு. ந ரா முருகவேள், திரு. கோவை இளஞ்சேரன், திரு. சிறுவை நச்சினார்க்கினியன் ஆகிய மறைமலையடிகளாரின் தொண்டர்களை உரிய சொற்றொடர்களால் நேரிய முறையிற் பாராட்டித் தவத்திரு குன்றக்குடியடிகளார் பேசிப் பட்டாடை அணிவித்து வாழ்த்தியருளினர். உண்மையிலேயே இந் நிகழ்ச்சி உள்ளத்தை உருக்குவதாக இருந்தது. சிவநெறி ஞாயிறாக விளங்கிய மறைமலையடிகளாருடைய தொண்டர்கள் அன்று பெற்ற சிறப்பு அடிகளாரது தனித் தமிழியக்கத்திற்கே செய்த பாராட்டு என்று கூறும்வண்ணம் தனித்திறத்தோடு இலங்கியது.

ஆட்சியாளரின் நன்றியுரை:

தவத்திரு அழகரடிகள் மறைமலையடிகளின் மாணாக்கராக இருந்த மாண்பினர். அவர்கள் எழுதிய ''மறைமலையடிகளார் வரலாற்றுமாட்சி'' என்ற நூல் விழாவெளியீடாக வெளியிடப்பெற்றது. மாம்பாக்கம் குருகுல மாணவி தாமரைச்செல்வி அடிகளாரது பல்வேறு எழுத்து நடையை நெட்டுருச் செய்து ஒப்புவித்த நிகழ்ச்சி விழா இறுதியில் விளக்கம் ஊட்டிற்று. தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களது நன்றியுரை, ஓர் உணர்ச்சி விருந்தாகவே அமைந்திருந்தது. மறைமலையடிகளாருடைய குடும்பம் புகழ்பூத்த பொற்புடையதாகப் புவியிடை விளங்கி வருவதையும், தமக்கும் அடிகளார்க்கும் ஏற்பட்ட தொடர்பு தழைத்து நிற்பதையும், அடிகளாரது நினைவாக அருங்கலை நூல்கள் பலவற்றைக் கொண்ட நூல்நிலையம் நிற்பதையும் கூறி எல்லோர்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்; மறைமலையடிகளார் நூல்களை எல்லோரும் வாங்குதல் வேண்டும் என்றும், தமிழர் மனைகள்தோறும் தமிழர் தனிப்பெருந் தலைவ

ராக விளங்கிய அடிகளாரின் அரும்பனுவல்கள் இருத்தல் வேண்டும் என்றும் நன்றியுரையின் இடையே அவர்களது வேண்டுகோள் உருக்கமாக அமைந்துவிட்டது.

செல்வியின் பொன்விழாச் சீர்மை :

செந்தமிழ்ச் செல்வி பொன்விழா 29-1-77 சனிக்கிழமை மாலை 5-30 க்குக் குறித்த நேரத்தில் தொடங்கிற்று. திருமண மண்டபம் தமிழ் அன்பர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ''வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீறுகொள் கூட்டம்; அன்னார், உள்ளத்தால் ஒருவரே; மற்றுடலினால் பலராய்க் காண்பார்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறியவாறு, அங்குக் குழுமியிருந்த பெருங்கூட்டம் தமிழ் உணர்ச்சியால் ஒன்றுபட்டு நின்றதென்று கூறுவது மிகையாகாது. மூத்த திங்களிதழான செல்வியின் பொன்விழாவில், அதனைத் தொடக்க காலத்திலிருந்தே கண்ணும் கருத்துமாகக் காத்துவரும் மூத்த தலைவர்கள் பலரும் கலந்துகொள்ளும் மாட்சி பாராட்டத் தக்கதாக இருந்தது. முன்னாள் போன்றே தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ் ஆராய்ச்சியாளர்கள், வழக்கறிஞர்கள், வணிகர்கள், தமிழ் மாணவர்கள், தமிழன்பு கொண்ட தாய்க்குலத்தார் மூத்தபேரறிஞர்கள், கல்வியாளர்கள், சிந்தனைச் சிற்பிகள் பலரைக் கொண்டதாக அவை விளங்கியது.


மேடைத் தோற்றம் :

மேடையில் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் நடுவண் தலைவராக வீற்றிருக்க, அவர்க்கு இரு மருங்கும் முத்தமிழ்ச் செல்வர் திரு. கி. ஆ. பெ விசுவநாதம் அவர்களும் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் அவர்களும் வீற்றிருந்தார்கள். திரு. கூத்தரசு பாடிய தேவாரப்பாக்கள் இறை வணக்கமாக எழுந்து மணம் பரப்ப, டாக்டர். சாலை. இளந்திரையன் அவர்கள் நாடகச் சுவை ததும்ப வரவேற்பு நிகழ்த்தினார்கள். முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களது தமிழ் உணர்ச்சி ததும்பிய தொடக்கவுரை, திரு. ம. பொ. சிவஞானம் அவர்களது தலைமை உரை, டாக்டர். வ. சே. குழந்தைசாமி அவர்களது பேழைத் திறப்புப் பேருரை, எம். கே. பாலசுப்பிரமணியம் அவர்களது மலர் வெளியீட்டுரை, செட்டிநாட் டரசர் இராசா. சர். முத்தையாச் செட்டியாரவர்களின் அரும்பொருள் உரை ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழ் விருந்து அளித்தன.

சென்றகாலமும் எதிர்காலமும் :

அடுத்துப் பாராட்டுரைகளாக முறையே, டாக்டர். ச. வே. சுப்பிரமணியம் அவர்கள், திரு. அ. உத்தண்டராமபிள்ளை அவர்கள்,

மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா
(28-1-1977)




தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் அவர்கள் அடிகளார் நூற்றாண்டு விழாத் தலைமையுரை ஆற்றுதல்.
மேடையிலிருப்போர்: உயர்திரு அரங்கபாஷ்யம், ஐ. ஏ. எஸ்.
தவத்திரு குன்றக்குடி அடிகளார்



தவத்திரு குன்றக்குடியடிகளார் மறைமலையடிகளார் தொண்டர்களைப் பாராட்டிப் பேசுதல்
உயர்திரு அரங்கபாஷ்யம், ஐ ஏ. எஸ்., தாமரைச் செல்வர் அவர்கள்,
உயர்நீதி மன்ற நடுவர் மாண்புமிகு எஸ். மோகன்.

மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா
(28—1—1977)



மறைமலையடிகளார் தொண்டர்களான தவத்திரு அழகரடிகள், மறை திருநாவுக்கரசு, ந. ரா. முருகவேள், கோவை இளஞ்சேரன், சிறுவை நச்சினார்க்கினியன் ஆகியோர்க்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல்

டாக்டர் பொற்கோ அவர்கள் ஆகியோர் ஆற்றிய விரிவுரைகள் தமிழ்ப் பணியாற்றித் தழைத்துச் சிறந்துள்ள செல்வியின் சிறப்புறு பணிகளை எடுத்து ஏத்துவனவாக அமைந்தன. 'சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்' என்று சேக்கிழார் பாடியதற் கேற்பப் பொன்விழாக் கண்ட பொற்புறு செல்வியின் பணிகள் பல நிரம்பிய சென்ற காலச் சீர்மையும், எதிர்கால ஏற்றமும் கேட்போர் செவிவழிப் புகுந்து சிந்தையெலாம் நிறையுமாறு நிகழ்ச்சிகள் அனைத்தும் அமைந்திருந்தன.

செந்தமிழ்ச் செல்வியின் ஆசிரியர் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களது நன்றியுரை, செல்விக்கு வாழ்நாட்கையொப்பம் கொடுப்போர் தொகை பெருக வேண்டும் என்ற வேண்டுகோளுடன் அமைந்திருந்தது.

நல்லுணர்ச்சி விழாக்கள் :

இவ்வாறு இவ்விரண்டு நாட்களிலும் மயிலாப்பூரிலே, இராசேசுவரி திருமண மண்டபத்தில் நிகழ்ந்த இரு பெருவிழாக்கள் தமிழ் அன்னையின் அரும்புதல்வர் ஒருவர்க்கும், அரும் புதல்விக்கும் எடுக்கப்பட்ட நல்விழாக்களாக நல் உணர்ச்சி விழாக்களாக அமைந்திருந்தன. இவற்றால் தமிழ் உணர்ச்சி பரவிச் செழித்துத் தனித்தமிழ் இயக்கம் இமயமென நிலைபெற்று மாண்புறும் என்பது ஒருதலை.

வாழ்க தமிழ் இமயமாகிய மறைமலையடிகளார் வான்புகழ்!

வாழ்க பொன்விழாக் கண்ட பொற்புறு செல்வி!

தமிழிலேயே கற்றுத் தேறலாம்

மற்ற மொழிகளில் நாடோறும் புதியனவாய் வெளிவரும் அரும்பொருள் நூல்களையெல்லாம் தமிழில் மொழி பெயர்ப்பித்துக் கற்பிக்கத் தலைப்பட்டால், இப்போது பதினைந்து ஆண்டுகளுக்குமேல் ஆங்கில மொழியை மிக வருந்திக் கற்று ஒருவர் தெரிந்து கொள்ளும் பொருள்களெல்லாம், நமது செந்தமிழ் மொழியில் ஏழெட்டு ஆண்டுகளில் இன்னுஞ் செவ்வையாகக் கற்றுத் தேறலாம்.

மறைமலை அடிகள்
(அறிவுரைக் கொத்து, பக். ௧௧)

இருபெரு விழாக்கள்

மறைமலையடிகள் நூற்றாண்டுவிழா

செந்தமிழ்ச்செல்வி பொன்விழா

தனித் தமிழ்த் தந்தையும் பல்துறைப் பேரறிஞருமான மறைமலையடிகளாரின் நூற்றாண்டு நிறைவும், அவர்களால் துவக்கப்பட்ட 'செந்தமிழ்ச் செல்வி'யின் 50 ஆண்டு நிறைவும் ஒருங்கமைந்தமை தமிழருக்குக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாகும். இவ்விரு பெரு விழாக்களையும் சை. சி. நூற்பதிப்புக் கழகம் நடத்திய மாண்பினையும் அந்நிகழ்ச்சிகளையும் காண்போம்.

கடந்த 28, 29—1—1977ஆம் நாள்களில் மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் முறையே மறைமலையடிகள் நூற்றாண்டு விழாவும், செந்தமிழ்ச் செல்வி பொன் விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

க. மறைமலையடிகள் நூற்றாண்டு விழா

28—1—77 மாலை 5-30 மணி யளவில் நாதசுர இன்னிசையுடன் இவ்விழா துவங்கிற்று. மறைமலையடிகளாரின் பேத்தியான திருமதி சாரதா நம்பிஆரூரன் இறைவணக்கப் பாடல்கள் பாடியபின் அடிகளாரின் 'திருவொற்றிமுருகர் மும்மணிக்கோவை'யிலிருந்து ஒரு பகுதியை இசையுடன் பாடினார். முன்னாள் உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை எஸ். மகராசன் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில்,

"ஆங்கிலேயர் நம்மை ஆண்டுகொண் டிருந்த காலத்தில் தன்னம்பிக்கையற்று நம்முடைய பண்பாட்டிலும், தாய் மொழியிலும் நம்பிக்கை இழந்து கையறு நிலையில் இருந்த நமக்கு ஆர்வமூட்டி நம்முடைய மொழியும் நம்முடைய பண்பாடும் சமயமும் ஆங்கிலேயருடைய மொழி - சமயம் - பண்பாடுகளுக்குக் குறைந்தவையல்ல என்பதை எடுத்துக்காட்டி நமக்கு ஆண்மையூட்டிய தேசியத் தலைவர் சிலருள் மறைமலையடிகளார் ஒருவராவார்.

"ஆங்கிலப் பேச்சுகளுக்கெல்லாம் நிரம்ப மதிப்பிருந்த அக்காலத்தில் ஆங்கிலப் பேச்சோடு போட்டியிட்டுப் புறங்கண்டன அடிகளாருடைய பேச்சுகள்.

''தமிழ்ப் பேச்சுகளுக்கு மதிப்பில்லாதிருந்த அந்தக் காலத்தில் 300 வெண்பொற்காசுகள் அனுப்பினாலன்றி அடிகள் பேச வரமாட்டார்.

''ஒரு முறை திருநெல்வேலியில் அவருடைய பேச்சு தொடங்குகின்ற நேரத்தில் திருநெல்வேலி சைவர் ஒருவர், 300 வெண்பொற்காசுகள் கேட்கும் இவர் என்ன துறவி; இவரைக் கண்டிக்கிறேன் என்று உரத்த குரலில் பேசினார். உடனே அடிகள் இந்தக் கண்டனத்திற்குச் சொன்ன பதில் எல்லாருடைய மனத்திலும் ஆணித்தரமாகப் பதிந்து கவர்ந்தது. அதைக் கேட்ட கண்டனம் தெரிவித்தவர், அடிகளார் பேச்சு முடிவதற்குமுன் ஆயிரம் பேர்களுக்கு முன் அடிகளார் கால் மாட்டில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''அடிகளாரைக் கிண்டல் செய்தவர்களெல்லாம் என்ன பாடுபட்டார்கள் என்பதற்கு ஒரு தனிக் குறிப்பே கொடுக்கலாம். சவுக்கடி கொடுக்கவேண்டிய இடத்திலே சவுக்கடி கொடுத்தும், பன்னீர் தெளிக்கவேண்டிய இடத்தில் பன்னீர் தெளித்தும் பேச்சுத் தந்திரங்களைக் கையாண்டு பெரும்புகழ் ஈட்டியவர் மறைமலையடிகளார். ஆயிரக் கணக்கான மக்களின் மனக் கல்லைப் பிசைந்து கனியாக்கி, இறைவனுடைய வான் கருணை வெள்ளத்தில் ஆழ்த்திய பெருமை அடிகளாருடையது.

''இவ்வாறாகத் தமிழுக்கும், சைவத்திற்கும் என்றும் வாடாத பணியைச் செய்தவர் மறைமலையடிகள். அடிகளாருடைய கொள்கைகளைப் பரப்ப 50 ஆண்டுகளுக்கு முன்னால் செந்தமிழ்ச் செல்வி தொடங்கப் பெற்றது. இதற்கெல்லாம் காரணராய் இருந்தவர் என் அருமை நண்பர் தாமரைச் செல்வர் அவர்களுடைய தமையனாரும், மறைமலையடிகளாரின் மருமகனாருமான திருவரங்கம் பிள்ளை அவர்களாவார்'' என்று கூறித் திருவரங்கம் பிள்ளை அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார். தொடர்ந்து அவர் பேசுகையில், திருவரங்கம் பிள்ளை அவர்கள், அந்நாளில் நடைபெற்ற எருமைக்கடா பலியிடுதலைத் தடுத்து நிறுத்த மேற்கொண்ட முயற்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டார். 1920இல் திருவரங்கனார் தெ. இ. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோற்றுவித்தது பற்றியும், 1923இல் செந்தமிழ்ச் செல்வி தோற்றுவிக்கப்பட்டது பற்றியும், திருவரங்கனார்க்குப் பின் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் அப்பொறுப்புகளை ஏற்று நடத்தும் அவர்தம் தமிழ் அன்பு—ஆட்சித் திறன்—சலியா உழைப்பு ஆகியன பற்றியும் குறிப்பிட்டு அனைவரையும் வரவேற்றார்.

தொடக்க வுரை :

மாண்பமை உயர்நீதிமன்ற நடுவர் எஸ். மோகன் அவர்கள் தமது தொடக்கவுரையில்,

"மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவில் தொடக்க வுரை ஆற்றுவதில் பெருமை கொள்ளுகிறேன். ஆனால், அடிகளாருடைய சிறப்புகளைப் பேச எதிலே தொடங்குவது? அவர் திருவுருவத்திலே தொடங்குவதா? சொல் வன்மையிலே தொடங்குவதா? தமிழ் மறுமலர்ச்சியிலே தொடங்குவதா? அவர் மேற்கொண்ட தீண்டாமை ஒழிப்பு, கைம்பெண் மண ஆதரவு ஆகியவற்றில் தொடங்குவதா என்று எண்ணவேண்டிய நிலையில் அத்தகைய அறிவுக் கடலுக்கு இத்தகைய விழாக்கள் நடைபெறுகின்றன,

"இப்போது தமிழிலே பேசுவதுதான் நாகரிகம் என்ற அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம். இந்த மறுமலர்ச்சிக்கு மறைத்திரு மறைமலையடிகளைத்தவிர வேறுயாருமே காரணர் ஆகார். எழுத்திலே அவர் செய்த புரட்சி சாதாரண புரட்சியன்று. ஆங்கிலம் கலவாமல் - வடமொழி கலவாமல் விளக்க முடியும் என்பதற்கு அவரது நூல் நிலையத்தைப் பாருங்கள். அவருடைய முத்து முத்தான கையெழுத்துக்களைக் காணலாம். காந்தி அடிகள் தம்முடைய கையெழுத்து நன்றாக இல்லை என்றும் ஒரு மனிதனுடைய கையெழுத்தைக் கொண்டுதான் அம் மனிதனை எடைபோட வேண்டும் என்றும் தம்மையே சாடிக் கொண்டார். அடிகளாரின் கையெழுத்தைக் கொண்டே அவர் எத்தகைய குணங்களைக் கொண்டவர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவ்வளவு அழகான எழுத்துகள்.

"அவைகளை யெல்லாம் பராமரித்து இங்குக் காட்சியாக வைத்திருக்கும் தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை அவர்களை அங்கே கண்டேன். நூருண்டு வாழ்வது எப்படி என்று சொன்ன அடிகளார்க்கு நாம் இன்று நூற்றாண்டு விழா எடுக்கின்றோம். ஆனால், அவர் நூருண்டு வாழ முடியவில்லை. இது தமிழ் நாட்டின் தீவினையே என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் 'நான் மறைமலை அடிகளைப் பின்பற்றுகிறேன்' என்று சுப்பையா பிள்ளை அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் பின்பற்றத்தான் வேண்டும். அவர்கட்கு இப்போது 80 வயது நடக்கிறது. 80 வயது இளைஞராகிய அவர்கள் நூருண்டு வாழ வேண்டும். ஏனென்றால் மறைமலையடிகளைப் போன்ற தலைவர்கள், அவருடைய உயர்ந்த கருத்துகளைக் கொண்டவர்கள் நம் நாட்டிலே அடிகளாருடைய கருத்து மூலமாக நடமாடுகின்

ருர்கள் என்ருல், அதற்குக் காரணம் தாமரைச் செல்வர் அவர்கள் செய்த சீரிய பணிதான் என்று சொல்வேன்.

''மறைமலை அடிகள் பிறந்த காலத்தில் தமிழகம் இருண்டு கிடந்தது. அடிகள் தோன்றி ஒரு மலர்ச்சியை உண்டாக்கினர். கிறித்தவக் கல்லூரியில் அவரிடம் தமிழ் படித்தவர்கள் மிகச் சிறந்த உயர்ந்த நிலைகளை அடைந்திருக்கிருர்கள். டாக்டர் சுப்பராயன், டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்ற வர்கள் அவருடைய மாணுக்கர்களா யிருந்தவர்கள். அடிகளா ருடைய பாடம் அவ்வளவு பெருந்தகைமை வாய்ந்ததாய் இருந்தது.

''அடிகளார் தமிழையும் சைவத்தையும் வளர்த்தது போலவே சீர்திருத்த வாதியாகவும் இருந்தார். தீண்டாமை கூடாது, அதிலும் கோயில் வழிபாட்டிலே அது கூடாது எனப் பறை சாற்றினர். கைம்பெண் மணம், கலப்பு மணம் ஆகியன வேண்டும் என்னும் கருத்துகளைப் பரப்பினர். அதன் விளை வாகத்தான் கலப்பு மணத்திற்கு அரசாங்கமே உதவ முன்வந் திருக்கிறது.

''இப்படி யெல்லாம் பலப்பல சீர்திருத்தக் கருத்துகளை அள்ளிக்கொடுத்துத் தமிழருடைய வாழ்வு தம்முடைய வாழ்வு எனத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டார் அடிகள். அப்படிப் பட்டவர்க்கு நன்றிக் கடன் ஆற்ற அவருடைய கருத்துகளைப் பின்பற்றி நடப்பதுதான் நாம் செய்ய வேண்டிய மரியாதையும் போற்றுதலுமாகும்,'' என்ருர்.

தலைமை உரை :

தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தம்முடைய தலைமையுரையில்,

''நாற்பது ஆண்டுகளுக்கு முன் பல்லாவரம் மாளிகையிலே அடிகளார் எங்களுக்குத் தந்த பயிற்சி இன்னமும் பசுமையாக நினைவிலேயிருக்கிறது. திருவத்திபுரம் ஔவையார் கழகஆண்டு விழாவிலே அடிகளாரைத் தலைமை தாங்க அழைத்தோம். அவ்விழா 3 நாள் விழா. நாள் ஒன்றுக்கு 100 வெண்பொற் காசுகள் தேவை என்று எழுதினர் அடிகள். எங்களிடம் இருந்தது 200 வெண்பொற் காசுகளே. பல்லாவரத்தில் அடிகளை நேரில் கண்டு அந்த 200 வெண்பொற் காசுகளைக் காணிக்கையாக வைத்து அடிகள் எப்படியாவது வந்துதான் தீர வேண்டும் என்று வேண்டிக் கொண்டோம். அவர்கள் எங்களைப் பாராட்டி, மூன்று நாள்களுக்கும் 300 வெண்

பொற்காசுகள் கொடுத்து விடுங்கள் என்று கூறிவிட்டார். மூன்றுநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. அந் நிகழ்ச்சிகள் இன்றும் பசுமையாக நினைவிலிருக்கின்றன.

“1939 இல் தமிழ் நாட்டவர்க்கு—தமிழ் மொழிக்குக் கேடு வந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டபோது, திருச்சியிலே யிருந்து வந்த தமிழர் பெரும் படைக்குச் சென்னைக் கடற்கரை யிலே பெரிய வரவேற்பளிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தின் தலைவர் நம்முடைய மறைமலையடிகளார். அக் கூட்டத்தில் சோமசுந்தர பாரதியார் பேசிய பேச்சைக் கேட்டு அடிகள் பூரித்துப்போன நிகழ்ச்சி இன்னமும் எங்கள் நினைவிலே இருக்கிறது.

“40 ஆண்டுகளுக்கு முன் அடிகளார் தமிழார்வத்தைப் புகட்டிய சூழ்நிலை அறிந்தவர்களுக்குத்தான் உண்மை தெரியும். தமிழிலே பேசுவது இழுக்கு என்றிருந்த நேரத்திலே தனித் தமிழிலே பேசிக் காட்டியிருக்கிறார். தமிழிலேயிருந்து பிறந்த மொழிகள் தமிழை அழித்துவிட்டுத் தான் வளர்ந்திருக்கின்றன. தமிழிலே பிறமொழி கலக்கக் கூடாதா என்று கேட்டால், கலக் கலாம்; ஆனால் தொல்காப்பியர் கருத்துப்படி, தமிழிலே அப் படிப்பட்ட சொல் இல்லையென்றால் தமிழ் ஒலிக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும், பிற மொழிக் கலப்பே கூடாது என்ற குறுகிய நோக்கம் தமிழர்க்கு இல்லை. தமிழ் மொழியினை அறவே மறந்துவிட்டு வேண்டுமென்றே பிறமொழிச் சொற் களைப் பேசுகின்ற நிலை ஏற்பட்ட போதுதான், மறைமலை யடிகள் தம்முடைய பெயரையே முதன் முதலில், மறைமலை அடிகள் என்று மாற்றிக் கொண்டதும் தனித் தமிழ் இயக்கம் கண்டதும் ஆகும். அதை நாம் பேணிக் காக்கவேண்டும்.

“ஏற்றுக்கொள்ளக் கூடாத புராணக் கருத்துகளை அடி களார் வன்மையாகச் சாடியிருக்கிறார்கள். சைவ சமயத்தி லுள்ள நுணுக்கமான கருத்துகளை விளக்கி யிருக்கிறார்கள். இலக்கியத்தோடு - சமயத்தோடு - மொழியோடு தம்மை இரண் டறக் கலந்துகொண்டார் அடிகள்.

“இந்திய நாட்டுக்கு விடுதலை கிடைக்குமானால் தமிழர் நிலை எப்படி இருக்கும் என்பதை அப்போதே கண்டறிந்து கூறியவர் அடிகள்.

“எனவே, தமிழ்மொழி வாழ - தமிழர் வாழ - சைவம் வாழ அவருடைய உணர்வுகளுக்கு மதிப்புத் தந்து அதன்படி நடப் பதே அவருக்கு நாம் காட்டும் நன்றிக் கடனாகும்” என்றார்.

மலர் வெளியீடு :

மறைமலை அடிகளார் நூற்றுண்டு விழா மலரினை வெளியிட்டுக் கல்வித்துறைச் செயலர் உயர்திரு. சி. ஜி. அரங்கபாஷியம், ஐ. ஏ. எஸ். அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :

''மறைமலையடிகள் தமிழ் அறிஞராக மட்டுமில்லாமல் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். வடமொழியிலுள்ள காளிதாசரின் நாடகமான சாகுந்தலத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அது பல ஆண்டுகளாகப் பல்கலைக் கழகப் பாடமாக இருந்திருக்கிறது. அவரது சாகுந்தல நாடகத்திற்குச் சரியான ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவோர்க்கு காஞ்சி காமகோடிபீடம் பரிசு வழங்கினர் என்ருல் அந் நூலுக்கு அவர் தந்திருக்கும் மதிப்பினைப் புரிந்து கொள்ளலாம். அடிகள் மூட நம்பிக்கைகளை ஒழிக்கவேண்டும் என்று சொன்ன அதே நேரத்தில் சமயத்துக்கும் மூத்தோர்க்கும் மரியாதை கொடுக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தி வந்தார். அவர் தோற்றுவித்த செந்தமிழ்ச் செல்வி என்னும் திங்கள் இதழையும் பெரியதொரு நூலகத்தையும் பேணிவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை அவர்களையும் பாராட்டுகிறேன்.''

பாராட்டுரை :

டாக்டர். ஔவை நடராசன் அவர்கள் ஆற்றிய பாராட்டுரையின் சுருக்கம் :

''மறைமலையடிகளார் விழாவினைப் பற்றி நான் சொல்லக் கேட்ட என் தந்தையார், அடிகளார் வெண்பொற் காசுகள் தந்தால் தான் பேச வருவார் என்று சிலபேர் சொல்லுவார்கள் ; ஆனல் உண்மையான அன்புடையவர்கள் வந்து கேட்டால் தாராளமாகத் தமிழ் பொழிவார்கள் என்று சொன்னர்கள். மேலும் அடிகளாருடைய தமிழ்ப் புலமை—ஆங்கிலப் புலமை-வடமொழிப் புலமை ஆகியவற்றைக் கண்டுதான் நாங்களெல்லாம் அம் மொழிகளைக் கற்கலானேம். அவர்களுடைய பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சிகளைப் பார்த்த பிறகு தான் எனக்குச் சங்க நூல்களுக்கு உரை எழுதவேண்டும் என்னும் உணர்வு ஏற்பட்டது. அவர்களுடைய சமயச் சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு தான் நானும் சிவஞானபோதம், ஞானமிர்தம் ஆகியன பற்றி எழுதத் தொடங்கினேன். எனவே என்னுடைய வாழ்வெல்லாம் அடிகளார் இட்ட பிச்சை என்று சொன்னல் போதும்'' என்று சொன்னர்கள்.

'சாதி வேற்றுமை என்பது வேதத்தில் இல்லை; பழைய வடமொழி நூல்களில் இல்லை என்பதை மேற்கோள்களோடு அடிகளார் விளக்கியிருப்பதை வடமொழிவாணர்கள் நினைந்து நினைந்து போற்றுகிறார்கள். சாகுந்தலத்தைப் பல பேர் மொழி பெயர்த்திருந்த போதிலும் அடிகளார் மொழி பெயர்ப்பைக் கண்டு, காஞ்சி காமகோடிபீடம் எவ்வளவு விரும்பி அதிலே பரிசு ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால் அடிகளாருடைய செந்தமிழ்ப் புலமை எத்தகையது என்பதை எண்ணிப்பாருங்கள்.''மறைமலை யடிகள் எதையும் தெளிவாக—எளிதாக—நேராக—இனிமை யாகச் சொல்லவேண்டும் என்ற எண்ணமுடையவர். எதையும் எண்ணி எண்ணிப் பேசியவர். சொற்களை அளந்து பேசியவர்:

''நாமெல்லாம் தலைநகருக்கு வருகிறபோது மறைமலை யடிகளார் பாலத்தைத் தாண்டி வருகிறோம். அதனால் நமது மனமெல்லாம் குளிர்கிறது. அடிகளாருடைய புலமை நாடு முழுவதும் பரவுதல் வேண்டும். அவரது கடல் போன்ற புலமைக்கு இன்று நாம் வணக்கம் செலுத்துகிறோம்,'' என்றார்.


டாக்டர் சொ. சிங்காரவேலன் :

அடுத்துப் பாராட்டுரை வழங்கிய டாக்டர் சொ. சிங்கார வேலன் அவர்கள் தமதுரையில்,

''மறைமலையடிகளைத் தனி மனிதர் என்று சொல்லுவதை விட அவர் ஓர் இயக்கம் என்றே சொல்லலாம் என்னும் அளவுக்கு அவர்கள் ஒவ்வொன்றையும் தம்முடைய வாழ்க்கை யிலே நடத்திக் காட்டினார்கள். அடிகள் சொற்பொழிவுக்குக் கைம்மாறு கேட்டார்கள் என்று சொன்னால், சொற்பொழிவின் அருமை கருதிக் கேட்டார்கள். சொற்பொழிவு இலேசான காரியமன்று; இலவசமாக வழங்குவதன்று என்பதை உணர்த்து வதற்காகத்தான் கைம்மாறு வாங்கினார்கள். அவர் நாமெல்லாம் பின்பற்றத் தக்க பேரருளாளர்—பெருந்தகை. முடிந்த வரையில் தமிழில் எழுதுவோம். முடிந்த வரையில் எழுதுகிற எழுத்திலே வழுப்பட்ட சொற்களைச் சேர்க்காமலிருப்போம். அடிகளார் 60 ஆண்டுகட்கு முன்பே முற்போக்குக் கொள்கைகளைக் கொண் டிருந்தார் என்பது அவருடைய அம்பிகாபதி அமராவதி, கோகி லாம்பாள் கடிதங்கள் என்னும் நூல்கள் எடுத்துக் காட்டு கின்றன'' என்றார்.

உயர்திரு ந.ரா. முருகவேள், எம். ஓ. எல். அவர்கள் பாராட்டுரை வழங்குகையில்,

''மறைமலையடிகள் வேறு, தமிழ் வேறு அல்ல. சங்க நூற்கள் என்று எழுதுவது இலக்கணப்படி சரியாக இருப்பினும்,




கல்வித்துறைச் செயலர் உயர்திரு சி. ஜி. அரங்கபாஷியம் ஐ.ஏ.எஸ்,
அவர்கள் மறைமலேயடிகளார் நூற்றுண்டு விழா மலரை வெளியிட,
அதனை முன்னுள் உயர்நீதி மன்ற நடுவர் உயர்திரு
எஸ். மகராசன் அவர்கள் பெறுதல் கழகப் பொது மேலாளர்
திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்களும் படத்தில் காணப்படுகிருர்




கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர்
வ. சுப்பையா பிள்ளை அவர்கள் நன்றி நவிலுதல்

'செந்தமிழ்ச் செல்வி' பொன் விழா
(29—1—1977)



சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள்
தலைமையுரை ஆற்றுதல்
செட்டி நாட்டரசர், சாலை இளந்திரையன்,
டாக்டர் வ. செ. குழந்தைசாமி, தாமரைச் செல்வர் ஆகியோர்



முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ விசுவநாதம் அவர்கள்
பொன் விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றுதல்

சங்க நூல்கள் என்று எழுதுவதுதான் சிறப்பு—தமிழ் மெல் லோசை வாய்ந்த மொழி. எனவே நூல்கள் என்று எழுதுவதே சிறப்பு என்றார்கள். ரோஜா என்பதை உரோஜா என்றோ - ரோசா என்றோ - அவர்கள் எழுத மாட்டார்கள். தாமரைக்கு நிகரான ஒரு பூ ரோஜா. ஆனால், தாமரை நீரிலே தோன்று கிறது. ரோஜா நிலத்திலே தோன்றுகிறது. எனவே, இதை நிலத்தாமரை என்றார்கள். இப்படி நூற்றுக்கணக்கான சொற் களை இயல்பான தமிழில் அமைத்து எழுதியிருக்கிறார்கள். சைவத்தினுடைய அடிப்படையான உண்மையை உணர்ந்தவன் தான் உண்மையான சைவனாவான் என்றும், 'சைவனைவிடச் சைவசித்தாந்தியைத்தான் நான் போற்றுவேன்' என்றும் சொல்லுவார்கள். தமிழனாகப் பிறந்தது மட்டுமன்று, சைவனாக - சைவ சித்தாந்தியாகத் தம்மைப் பிறக்க வைத்த கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பார். சைவ சித்தாந்தம் முன்னரே இருந்தது. ஆனால், மறைமலையடிகள் தோன்றிய பின்னரே அஃதொரு புத்துயிரும் புதிய ஆற்றலும் பெற்றது. அடிகளார் தாம் பிறந்த நாட்டிற்காகத் தமிழைக் கற்றார்; பாரதக் கலைப் பண்பாட்டிற்காக வடமொழியிலே தேர்ச்சி பெற்றார்; உலகக் குடிமகன் (Citizen of the world) என்ற முறையிலே ஆங்கிலத்திலே கரைகண்டார். அவருடைய கொள்கைகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் பரப்ப வேண்டும். அதன் மூலம் தான் தமிழ்நாட்டிற்கும் - இந்திய நாட்டிற்கும், உலகத்திற்கும் நன்மை வரும்'' என்றார்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியம் அவர்கள்:

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது பாராட் டுரையில்,

''தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பிலே 1800 ஆண்டு கட்குமுன் சிலப்பதிகாரத்தைத் தந்த இளங்கோவடிகளைக் காண்கிறோம். அதற்கப்பால் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் இளம்பூரண அடிகளைக் காண்கிறோம். அதற்குப் பிறகு 1000 ஆண்டுகள் கடந்து பார்க்கின்றபோது நம்முடைய மறைமலை யடிகளாரைக் காண்கிறோம்.

காதலும் போரும் சங்க கால இலக்கியமாகவும், சமயமும் தத்துவமும் இடைக்கால இலக்கியமாகவும், அறிவியல் நூல்கள் இக்கால இலக்கியமாகவும் திகழ்கின்றன என்றார் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை. இந்த இலக்கியப் பரப்பினையும் அடிகளாருடைய நூல்களையும் எண்ணிப் பார்ப்போமானால்

இப்படிப்பட்ட இலக்கியப் பரப்பிலே நுழைந்து அரிய நுட்பங்க ளெல்லாம் கண்டு செம்மையான நூல்களைத் தமிழுலகிற்கு அளித்தவர் மறைமலையடிகளாரே என்பதில் ஐயமில்லை என்பதைக் காண முடியும். தம்முடைய வாழ்நாள் தொடக் கத்திலேயே புலவர்களுக்கெல்லாம் வாய்மறுத்து - தக்க உரை தந்து அவற்றை மாற்றுகின்ற போக்கிலே உரைகள் எழுதக் கூடிய பெரும் புலவராக விளங்கியவர் மறைமலையடிகள். கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் புலமை நடாத்தியபோது தணிகைமணி செங்கல்வராய பிள்ளை, ரசிகமணி சிதம்பரநாத முதலியார், திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயர் ஆகிய மூன்று மணிகளை ஈன்ற தமிழ்மணியாக விளங்குகின்றார் மறைமலை யடிகள். ஷேக்ஸ்பியர் வேண்டுமா இந்தியப் பேரரசு வேண்டுமா என்று ஆங்கிலப் பேரறிஞர்களிடம் கேட்டால் (இந்தியா ஆங்கில ஆட்சியில் இருந்த காலம் அது) இந்தியப் பேரரசை இழந்தாலும் இழப்போம் ஷேக்ஸ்பியரை இழக்கமாட்டோம் என்பர். அதுபோல் நாம் அடிகளாரைப் போற்ற வேண்டும். நூல்களை எப்படி வாங்குவது—எப்படிப் பயன் படுத்துவது என் பதற்கெல்லாம் அடிகளார் நமக்கு வழிகாட்டுகின்றார்,'' என்றார்.

தவத்திரு அழகரடிகள் :

தவத்திரு அழகரடிகள் தமது பாராட்டுரையில்,

"நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த அடிகளாரைப் பற்றி எதைச் சொல்லுவது எதைவிட்டுவிடுவது என்று தெரியவில்லை. அடிகள் தம் வாழ்க்கையில் மேன்மையானது கல்வி என்று தேர்ந்தெடுத்தார்கள். அந்தக் கல்வி எது என்று தேர்ந் தெடுத்தது தமிழ்மொழிக் கல்வி. தாய்மொழிக் கல்விதான் சிறந்தது என்பது அடிகளார் கருத்து. தமிழுக்கு ஒரு தூய்மை வேண்டுமென்றால் அது வாய்மையைச் சொல்லுவதுதான் என்று அடிகள் தேர்ந்தெடுத்தார்கள். அடிகள் எதை எடுத் தாலும் ஒழுங்கைக் கடைப்பிடிப்பார்கள். இன்னின்ன வேலை களை இன்னின்ன நேரங்களில் செய்வது என்று வரையறுத்துச் செய்வார்கள். எழுத்திலே ஒழுங்கு, வீட்டிலே சிறு செயலாயி னும் அதிலே ஒழுங்கு. சிறியது பெரியது என்று பார்ப்பதில்லை. ஒழுங்குதான் அவர்களுக்குப் பெரிது. உடம்பையும் மனத்தை யும் உயிரையும், உயிர்க்குயிரையும் ஒழுங்காக வைத்துக் கொண் டார்கள். தனித்தமிழ்ச் சுவை உணர்ந்து தனித்தமிழ் இயக்கம் கண்டார்கள். அடிகளார் நூற்றாண்டு விழாவையும் செந்தமிழ்ச் செல்வி பொன் விழாவையும் நாம் கொண்டாடுகிறோம். அது போதாது. அடிகளாரின் கோட்பாடுகளை வாழ்க்கையில் கடைப் பிடித்தல் வேண்டும்'' என்று கூறினார்.

அடுத்துத் தவத்திரு குன்றக்குடி அடிகளார், மறைமலையடிகளாரின் தொண்டர்களைப் பாராட்டு முகத்தான் ஆற்றிய பாராட்டுரையின் சுருக்கம் வருமாறு:

''ஒரு நூற்றாண்டுக்கு முன்பு மறைமலையடிகள் தேவைப் பட்டார்கள். இப்போது மறைமலையடிகள் நினைவு நமக்குத் தேவைப்படுகின்றது. தமிழ் நாட்டைப்போலக் கைம்மாற்றைத் திருப்பிக் கொடுக்காத பண்பாடில்லாத நாட்டை உலக வரலாற்றில் பார்க்க முடியாது. காரணம், நாம் எதையும் கேட்பதில் வல்லவர்கள். ஆனால், அதனை நடைமுறைப் படுத்துவதில் இருக்கிற தயக்கம் உலகத்தில் வேறு எந்த இனத்திற்கும் வந்ததில்லை. பலர் தாய் மொழிப்பற்றையே தவறாகக் கருதுகிற சாபக்கேடு வளர்ந்து வருகிறது.

''ஆசிரியர் இல்லாமல் பிற மொழிகளைக் கற்க முடியாது. ஆனால் தாய் மொழியை வீடும் வீதியும் கற்றுக்கொடுக்கின்றன. ஆங்கிலத்தில் பேசுவதையோ, வடமொழி பரவுவதையோ மறைமலையடிகள் வெறுக்கவில்லை. ஆனால் அவர் காலத்தில் நடந்த ஒரு கொடுமை கலப்படம். அடிகள் தமிழில் கலப்படம் செய்வதைத்தான் எதிர்த்தார்கள். அதாவது கலப்பட எதிர்ப்பு இயக்கம் நடத்தினார். அவ்வளவுதான்; ஒரு கருத்து இன்னொரு கருத்தை ஏவி ஆட்படுத்தக் கூடாது. இந்தக் கருத்திலேதான் அவர் தனித்தமிழ் இயக்கத்தை ஏற்படுத்தினார். தமிழ் மரபிலே நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னால் இந்திய மரபிலே நம்பிக்கை இல்லை என்று பொருள் அன்று. நாம் அப்படிச் சொல்லவில்லையே. நம்முடைய தாய் நல்லவள் என்று சொன்னால் அடுத்த வீட்டுத் தாய் கெட்டவள் என்று சொல்வதாகும் என்றால் அதில் பொருள் இல்லை.

மறைமலையடிகளாருடைய கொள்கைகளை இன்னமும் சமய நிறுவனங்கள் ஒன்று கூட ஏற்றுக்கொள்ளவில்லை. சமயம் என்பது சமுதாய நீதி வழங்குவதாக இருக்க வேண்டும் என்று கருதினார் அடிகள். அதனை வள்ளலார் அருமையாகப் பாடினார். ''வல்லார்க்கும் மாட்டார்க்கும் வாய்ப்பளிக்கும் வாய்ப்பே'' என்றார். அடிகளார்க்கு வள்ளலாரின் இந்தக் கொள்கையிலே நிரம்ப ஈடுபாடு உண்டு. அதனால்தான் 'பொதுநிலைக் கழகம்' என்று ஒன்று கண்டார். இப்போதுள்ள சமயங்கள் சமய நெறியைப் பரப்புவதை விட, அவைகளுக்குள்ளே இருக்கிற சண்டைதான் பெரிதாக இருக்கிறது.

முதலில் நான் இந்த விழாவிற்கு வர முடியாத நிலையில், வர மறுத்து விட்டேன். தாமரைச் செல்வர் 80 ஆண்டு வாழ்ந்

தவர் என்ருல் அவருக்கெனச் சில திறமைகள் இருக்கு மல்லவா? திரும்பவும் எனக்குக் கடிதம் எழுதினர். அதன் எதிரொலியாக 'வருகிறேன்' என்று கம்பிச் செய்திமூலம் தெரிவித்துவிட்டேன்.

மறைமலை அடிகளார் விழாவிலாவது ஒரு பத்து ரூபாய் கொடுத்தாவது மறைமலையடிகளாரின் ஒரு நூலையாவது வாங்குங்கள். ஒன்று மில்லை யென்ருல் மறைமலை யடிகளார் வாழ்க்கை வரலாற்றையாவது வாங்குங்கள்.

மறைமலை யடிகளார் ஒரு தனி இயக்கமாகவே வாழ்ந்தார்—மாய்ந்தார். பிறமொழி கலவாமல் பேசுகின்ற நெறிப்பிடிப்பு தமிழர்களிடம் இல்லை. தமிழர்களிடையே நெறி முறைகள் ஒழுங்காக இருந்திருக்குமாஞல், தென் கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதும் இருக்கின்ற ஒரு தமிழ் மண்டலம் இன்று இருந்திருக்க முடியும்.

மறைமலை அடிகள் கொண்டும், கொடுத்தும் வாழ்ந்தார். அவர் நிறையக் கொண்டார்—நிறையக் கொடுத்தார். அவர் வடமொழியிலிருந்தும் கொண்டார். ஆங்கிலத்திலிருந்தும் கொண்டார். கொண்டவற்றை மற்றவர்க்குத் தமிழிலே நன்கு கொடுத்தார்.

நல்ல தமிழில் பேசிஞல் ஆயுள் கூடும் என்கிருர் அடிகள். ஏனெனில் தமிழ் மொழி பேசுவோர்க்கு உயிர் மூச்சு அதிகம் செலவழிவதில்லை. நம்மிடத்திலே பக்தி வளருகிறது. ஞானம் வளரவில்லை. பக்தி ஒரு கருவியேயன்றி வேறில்லை.

தனித்தமிழ் இயக்கத்தை வளர்க்கவும் தமிழர் மரபுகளைக் காப்பாற்றவும் நாம் முயற்சி செய்யவேண்டும். மறைமலை யடிகளார் நூற்ருண்டு விழாவிலாவது சுப்பையா பிள்ளை அவர்களுக்கு மன நிறைவு தருகிறவாறு, மறைமலை யடிகளார் நூலாக வெளியிட்டன வெல்லாம் விற்பனையாகி விட்டன என்று ஒரு மன நிறைவு அவர்களுக்குக் கிடைத்தல் வேண்டும். (நான் வணிக நோக்கத்தோடு கூறவில்லை. நூல்கள் வாயிலாகத் தானே அடிகள் பேச முடியும்?)

எனவே, பிறந்த நாள்கள் வருகிறபோது, திருமண நாள் வருகிறபோது, மறைமலையடிகளார் நூற்ருண்டு விழாவிற்குள்ளாக மறைமலையடிகளார் நூல்களை வாங்கி வீட்டிலே வைக்க வேண்டும், என்ற உணர்வு தமிழகத்தில் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழர்களுக்குத் தமிழர்களிடையே தன்மான உணர்ச்சி வேண்டாம் என்று ஒரு பெரியவர் எனக்குப் பாடம் சொல்லிக்

கொடுத்தார். எனவே, தமிழர்கள் எதையும் தமக்குள்ளேயே விட்டுக் கொடுத்துச் சரி செய்து கொள்ளவேண்டும்.

அன்புகூர்ந்து மறந்து விடாதீர்கள், நாளை, மறு நாளாவது வீட்டுக்கொரு புத்தகம்—மறைமலையடிகளார் புத்தகம் வாங்குங்கள். இன வரலாறு—மொழி வரலாற்றிலே நம்பிக்கை யுடையவர்கள் அவர் எழுதிய மொழி வரலாறு பற்றிய நூல்களை வாங்குங்கள்; அல்லது 'தமிழர் மதம்' வாங்குங்கள்! சமய நம்பிக்கை உடையவர்கள் 'சிவஞானபோதம்' வாங்குங்கள் என்றார்.

அடுத்து, அழகரடிகள், மறை திருநாவுக்கரசு, ந. ரா. முருகவேள், கோவை இளஞ்சேரன், சிறுவை நச்சினார்க்கினியன் ஆகியோர்க்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னுடை போர்த்தி அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி மிகவும் சிறப்பித்தார்.

நூல் வெளியீடு :

தவத்திரு அழகரடிகள் எழுதிய 'மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி' என்னும் நூலினைப் புலவர் கோவிந்தன் அவர்கள் வெளியிட, உயர்நீதி மன்ற நடுவர் மாண்பமை எஸ். மோகன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

பாராட்டுப் பெற்றோரின் சார்பில் அடிகளாரின் திருமகனார் மறை திருநாவுக்கரசு அவர்கள் நன்றியுரை கூறினார்.

அடுத்து, கோவை இளஞ்சேரன் அவர்கள் நன்றியுரை கூறு முகத்தான் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :

"அடிகளார் பிறந்த நாகையில் அடிகளார்க்குச் சிலைவைத்திருக்கிறேன் என்ற காரணத்தால் எனக்கு இந்தச் சிறப்பு செய்யப்பட்டது. ஆனால், இந்த நன்றி நாகை நகரப் பெருமக்கள் 80 ஆயிரம் பேருக்குச் செலுத்தியிருக்க வேண்டும். இங்கு நீங்கள் அனைவரும் கூடிக் காட்டிய அந்த நன்றியைச் சுமந்து சென்று நான் நாகை நகர மக்களுக்குக் காட்டுவேன். அந்த மக்கள் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

மறைமலையடிகளார் நூல்நிலையத்திற்கு நன்கொடை :

அடுத்து மறைமலையடிகளாரின் இளைய மருமகனார் புலவர் திரு. குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள் மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடையாக 100 ரூபாய் வழங்கினார்கள்.

நன்றியுரை:

இறுதியில் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை ஆற்றிய நன்றியுரை:

இந்த விழாவில் கலந்து கொண்ட அனைவரும் மறைமலை யடிகளாரிடத்தும் சைவசித்தாந்தக் கழகத்திடமும் பேரீடு பாடு கொண்டவர்கள்.

இன்று வரவேற்புரை நிகழ்த்திய ஓய்வு பெற்ற நடுவர் மகராசன் அவர்கள் என்னிடம் நிரம்ப ஈடுபட்டவர்கள். அவர் களுக்கு என் நன்றி. அடுத்து நீதிபதி மோகன் அவர்கள் அவர் களுடைய 'குறளமுத'த்தை வானொலியில் கேட்டதிலிருந்து அவர்களை விழாவில் பேசவைக்க வேண்டுமென்று ஆசை. அவர் களும் அதற்கிணங்கி அருமையாகப் பேசினார்கள். அவர் களுக்கும் என்னுடைய நன்றி. தலைமை தாங்கிய புலவர் கா. கோவிந்தன் அவர்கள் கழக நூலாசிரியர் ஆவார்கள். அவர்கள் சங்க கால அரசர் வரிசை, புலவர் வரிசை என்று பல நூல்களைக் கழகத்திற்கு எழுதித் தந்துள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றி.

சைவ மடத்தை எப்படி நடத்த வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறவர்கள் நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகள் ஆவார்கள். அவர்கள் மடத்தில் சேர்ந்தது முதல் இத்தகைய தொண்டுகளைப் பண்ணிக் கொண்டே இருக் கிறார்கள். மற்ற மடங்களும் இவர்களைப்போல் வெளிவந்து பணியாற்ற வேண்டும். அவர்களும் நம் அடிகளாரைப் பின் பற்ற வேண்டும். அவர்கள் காரைக்குடி விழாவைக்கூட விட்டு விட்டு நமக்காக இவ் விழாவில் கலந்து கொண்டு அருமையாகப் பேசியமைக்காக வணக்கத்துடன் என் நன்றி.

அடுத்து, கல்வித் துறைச் செயலர் அவர்கள் என்னிடத்தில் மிக அன்பு காட்டுகிறவர்கள். அவர்கள் நூலகத்தை வந்து பார்த்துவிட்டு ஆண்டுக்குப் பத்தாயிரம் ரூபாய் பண உதவி செய் துள்ளார்கள். இப்போது பதினாயிரம் போதாது. கழகம் நூலகத்திற்கு ஆண்டு தோறும் தன் லாபத்திலிருந்து கொடுக்கும் தொகை குறைந்துகொண்டே போகிறது. எப்படி இந்த நூல் நிலையத்தையும் மறைமலையடிகள் கலைமன்றத்தையும் சிவஞான முனிவர் நூல் நிலையத்தையும் நடத்துவது என்ற கவலை இப் போது ஏற்பட்டுள்ளது. என் உடலும் நலிந்துவிட்டது. ஆனால் இதுவரை உறுதுணையாயிருந்த இறைவன் அருளால் எப்படியும் நடைபெறும் என்ற உறுதியான எண்ணம் எனக்குண்டு.

இனி அடிகளிடம் ஈடுபட்ட ஐந்து பேர்களுக்குச் சிறப்புச் செய்ய வேண்டுமென்று ஐவரைத் தேர்ந்தெடுத்தோம். அவர்கள் எவ்வளவு தகுதி படைத்தவர்கள் என்பதை இங்கே அடிகளார் தெரிவித்த பாராட்டுரைகளின்வழி நீங்களெல்லாம் அறிவீர்கள். ஆகையால் அவர்களெல்லாம் இன்னும் அடிகள் வழியைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இனி என் விருப்பம் என்னவென்ருல் மறைமலையடிகள் நூல்நிலையம் எப்போதும் ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் பயன் படுகிறது; இதுவரை அங்கே வந்து நூறு பேர்களுக்குமேல் பி.எச்டி., எம்.லிட். போன்ற பட்டங்களுக்கு வேண்டிய நூல்களை எடுத்துப் படித்துள்ளனர். மேனுடுகளிலிருந்து பலர் வரு கிருர்கள். இப்படிப்பட்ட நூல்நிலையம் தமிழுக்கென்று வேறெங்கும் இல்லை என்று அவர்கள் பாராட்டுகிருர்கள். அப் பேர்ப்பட்ட நூல்நிலையம் மேலும் சிறந்து நடக்க வேண்டு மென்பது எனது கருத்து. இதைச் 'செல்வி'யிலும் எழுதியிருக் கிறேன். 'மறைமலையடிகள் நூல் நிலையத்தை மேலும் வளர்ப்ப தெப்படி?' என்று எழுதியுள்ளேன். ஓர் அன்பர் உடனே ரூ 20 அனுப்பினுர். 'அனிச்ச அடி' நாடக ஆசிரியர் திரு. பழநி தம் வாழ்நாளுக்குப் பின்னுல் அதன் விற்பனை ஊதியத்தை நூல் நிலையத்திற்கு அளிக்க ஆவணம் எழுதியுள்ளார். இந்த நூல் நிலையம் மக்களாலேயே நடத்தப் பெற வேண்டுமென்பது என் எண்ணம். பட்டம் பெற்ற கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் திங்கள் தோறும் ரூ. பத்து அனுப்பலாம். அல்லது மண விழா, பிறந்த நாள் விழா போன்ற விழாக்களில் நூல் நிலையத்துக்கு நன்கொடைகள் அனுப்பலாம். அந்த முறையில் இந் நூல் நிலையம் மேலும் வளரும். மிக அரிய நூல்கள் நல்ல விலைக்கு மேனுடுகட்குச் சென்று விடுகின்றன. அவற்றை வாங்குவதற்குப் போதிய பண வசதி தேவை. இன்னுஞ் சில நூல்கள் அழிந்தே போகின்றன. அவை அழிந்து போகவிடாமல் படம் பிடித்துப் பாதுகாக்க வேண்டும். அதற்குரிய கருவியை வாங்கப் பணம் தேவை. இதற்கெல்லாம் முற்கூறிய முறைகளில் நன்கொடை கிடைத்தால் நல்லது.

இன்றைய விழாத் தலைவரான மறைமலையடிகளாருக்கும் கழகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. இக் கழகத்தை நிறுவிய என் தமையனுரான திருவரங்கனுர் முதலில் அடி களாரின் நூல்களை வாங்கி ஆங்காங்கு விற்றுப் பணந்திரட்டிக் கொடுத்தார்கள். பின்னர் மறைமலையடிகளாரின் மருமகனு ராகவே ஆனுர்கள்.

இவ்வாறு மறைமலையடிகளாரின் கொள்கைகளைப் பரப்பவே கழகம் பாடுபட்டு வருகிறது. நீங்கள் அனைவரும் அடிகளாரின் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

உ. செந்தமிழ்ச்செல்வி பொன்விழா

சை. சி. நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் கடந்த 50 ஆண்டுகளாக நடந்துவரும் சீரிய தமிழிலக்கியத் திங்கள் இதழ் செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழா 29-1-77 சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் தொடங்கிற்று. திரு. கூத்தரசு இறை வணக்கம் பாடினர்.

வரவேற்புரை :

தில்லி பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் ஆற்றிய வரவேற்புரையின் சுருக்கம் :

‘ இவ் விழா மூன்று நல்லோர்களின் பணிக்கு பொன் விழா என்றுதான் நான் கருதுகிறேன். ஒருவர் பவள விழாக் கண்டு விட்ட தாமரைச் செல்வர் பெரியவர் சுப்பையா பிள்ளை அவர்கள்; இன்னொருவர் என்னுடைய அன்புக்கும் நன்மதிப்புக்குமுரிய நண்பர்' கழகத்துப் பொது மேலாளர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள்; இன்னொருவர் என்னுடைய அன்புத் தம்பி, இந்த நாட்டிலே எந்தப் பணி ஆழமாக அமைதியாகத் திட்டமிட்டுச் செய்யவேண்டுமென்று நான் கருதுகிறேனோ அப் பணியிலே தனிச் சிறப்புப் பெற்றிருப்பவராகிய திரு. முத்துக்குமாரசாமி அவர்கள்.

மறைமலையடிகள் நூலகத்தை ஆராய்ச்சியாளர்க்கெல்லாம் பயன்படும்படி பார்த்துப் பேணி நடத்திக் கொண்டிருக்கிற முத்துக்குமாரசாமி போன்றவர்கள் தமிழ்நாட்டில் இல்லை. எனவே அவருக்கல்லவோ டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார் நண்பர் கண முத்தையா அவர்கள்.

நான் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்திருக்கிறேன். இங்குள்ளவர்கள் என்னை வரவேற்பதற்குப் பதிலாக என்னை வரவேற்க விட்டுவிட்டார்கள். “இந்த நிகழ்ச்சியை நாடக வழக் காகக் காணுகிறேன்” என்று சொல்லி முத்தமிழ்க் காவலர், சிலம்புச்செல்வர், டாக்டர் குழந்தைசாமி, டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியம், டாக்டர் பொற்கோ, ஐ.ஏ.எஸ். அதிகாரி

ஆகியோரின் சிறப்புக்களை எடுத்துக் கூறியும் தமக்கும் அவர்கட்கும் உள்ள தொடர்பினை விளக்கியும் அவர்கள் அத்தனை பேரும் தம்மை வரவேற்பது போலவும் அழகாகப் பேசி அனைவரையும் வரவேற்றார்.

தொடக்கவுரை :

அடுத்துத் தொடக்கவுரை ஆற்றிய முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமது உரையில்,

"செந்தமிழ்ச் செல்வி தொடங்கியபோது அதற்கு உறுப்பினராகச் சேர்ந்தும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுத்தும் பணிபுரிந்த எனக்குச் செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழா மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

"செந்தமிழ்ச் செல்வியைத் தொடங்கிய மூன்று பெருமக்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். முதலிலே இதுபற்றி நினைத்தவர் மறைமலையடிகள்; தொடங்கியவர் மணி திருநாவுக்கரசு முதலியார்; அதற்கு ஓயாது உழைத்தவர் திருவரங்கம் பிள்ளை அவர்கள்.

தமிழே சிவம்—சிவமே தமிழ் என்ற கொள்கையில் வந்தது செந்தமிழ்ச் செல்வி. நல்ல இலக்கண இலக்கியக் கருத்துக்களையெல்லாம் அந்தக் காலத்தில் இளைஞர்கள் பார்க்க வேண்டுமென்றால் இந்தச் செந்தமிழ்ச் செல்வியில்தான் பார்க்க வேண்டும். வெளிப்படையாகச் சொல்லுகிறேன்—நான் படித்தது—நான் பேசுவது—நான் படித்தறிந்த ஒரு பெரிய பல்கலைக்கழகம் செந்தமிழ்ச் செல்வி என்று ஒரு சொல்லில் சொல்லிவிடுவேன். இந்தத் திங்கள் இதழைப் படிக்காதிருந்திருந்தால் என்னுடைய தமிழறிவு இந்த அளவுக்கு வளர்ந்திருக்காது.

'இப்படிப்பட்ட நல்ல இதழுக்கு 50 பேர்தாம் ஆயுள் உறுப்பினர்கள் என்ற இந்த அறிக்கையைக் காணும்போது 5 கோடி தமிழ் மக்களிலே 4 கோடி 99 லட்சத்து 950 பேர் என்ன ஆனார்கள் என்று எண்ணிப் பார்க்கிறோம்.

"இனி யாராவது தமிழைப்பற்றி—தமிழர் நாகரிகத்தைப் பற்றி—தமிழ் இலக்கியங்களைப் பற்றி—மாறுபட்ட கருத்துக்களைப் பற்றி—தொல்காப்பிய சூத்திரம் பற்றிய ஐயப்பாடுகளைப் பற்றி நீங்கள் அறிய வேண்டுமானால், இதனுடைய பழைய மலர்கள் இருக்கின்றனவே—செந்தமிழ்ச் செல்வி 50 தொகுதிகள் அவற்றை விட்டால் உங்களுக்கு வேறு வழியில்லை.

"நாம் தமிழர்—நம் மொழி தமிழ்—என்ற உணர்வு வேண்டும். பிற மொழிச் சொற்களைத் தமிழில் கலந்தால் மொழி வளரும் என்று சொல்பவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டாமா?

"எனவே, நாடு செழிக்க—மொழி வளர—மக்கள் நல்வாழ்வு வாழ, நாம் வழி காணவேண்டும்—நீங்கள் எல்லோரும் நல்வாழ்வு வாழவேண்டும்" என வாழ்த்தி இவ்விழாவைத் தொடங்கி வைக்கிறேன்.

தலைமையுரை :

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம் :

"எத்தனையோ இடையூறுகளுக்கிடையே செந்தமிழ்ச் செல்வியை 50 ஆண்டுகளாக நடத்தி, அதனுடைய பொன்விழாவைக் காணுகின்ற தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை அவர்களே, அவையோர்களே!

செந்தமிழ்ச் செல்வி 50 ஆண்டுகளாக நடக்கின்றது என்றால் அது எளிதான செய்தியன்று. என்னைப்போன்று பத்திரிகை நடத்துபவர்களுக்குத்தான் அது தெரியும். கிளர்ச்சியாக நடத்தும் பத்திரிகைகள் கூட 50 ஆண்டுகள் நடந்ததில்லை.

"தமிழைப் பயில்வதற்குப் பள்ளிக்குப் போகாதவர்களும், கல்லூரிக்குப் போகமுடியாதவர்களும் இதைத் தொடர்ந்து படித்தாலே நல்ல தமிழ்ப் பயிற்சியைப் பெறுவதற்கு இது பயன்படும். இந்த மாதிரி பத்திரிகைகளை லாபகரமாக நடத்த முடியாது. தமிழாசிரியர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும் செந்தமிழ்ச் செல்வி போன்ற பத்திரிகைகளை வாங்குவது அவர்கள் கடமையாகும். தம்மையொத்த புலவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை அறிவதற்காகவேனும் இதைப் படிக்க வேண்டும். நாம் பொன்னைக் கொடுப்பதற்கில்லை; பொருளைக் கொடுப்பதற்கில்லை. கடமைக்காக இப்படிப்பட்ட பத்திரிகைகளை வாங்க வேண்டும்.

"சுப்பையா பிள்ளையவர்கள் இவ்வளவு சங்க இலக்கியங்களை அச்சிட்டுக் கொடுத்திருக்கவில்லை யென்றால் அந்தக் காலத்தில் பாடப் புத்தகங்களே வைத்திருக்க முடியாது. அந்த முயற்சிக்கு நன்றி செலுத்தும் விழாவாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

"தமிழ்க் கூட்டங்களுக்கு நிறையக் கூட்டம் வருகின்றது ஆனால் தமிழைப் படிப்பவர்கள்தான் குறைவு. தனித் தமிழை

விட்டுவிட்டு ஓடுவது தமிழுக்குச் செய்கின்ற துரோகமாகும். பத்திரிகைகளில் நல்ல தமிழ் இல்லை என்றால் அதற்குக் காரணம் தினசரி பத்திரிகைகளிலே தமிழ்ப் புலவர்கள் இல்லை. அரசியல் மேடைகளிலே தமிழ்ப் புலவர்கள் இல்லை. இதுதான் தனித் தமிழ் வளராததற்குக் காரணம். தமிழ்ப் புலவர்கள் சாமான்யர் களுக்கு உழைக்கப் போய்விட வேண்டும். சாமான்யர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே இருக்கின்ற இடைவெளிக்கு ஒரு பாலம் போடவேண்டும். பாலம் போட வேண்டுமென்றால் புலவர்கள் சற்று இறங்கிவர வேண்டும்.

''நாம் தான் தமிழுக்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தைப் பரப்புவதிலே நாம் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறோமே தவிர அடுத்தவர்கள் செய்வதை ஒப்புக் கொள்வதில்லை. இது நம்மிடையே உள்ள ஒரு குறைபாடு.

"இந்த விழா தாமரைத் திரு. சுப்பையா பிள்ளை அவர் களுக்குத் தமிழ்ப் புலவர்கள், தமிழில் நம்பிக்கை உடையார், தமிழ்ப் பற்றுடையார் எல்லாரும் சேர்ந்து நன்றி தெரிவிக்கும் விழாவாக நாம் எண்ண வேண்டும். அந்த நன்றியை உங்கள் கை தட்டுதல் மூலம் தெரிவிக்க வேண்டும். (கைதட்டல்)

''செந்தமிழ்ச் செல்வி நீடு நிலைத்து வாழவேண்டும். சுப்பையா பிள்ளை அவர்களும் அவருடைய நிறுவனங்களும் வாழ்க'' என்றார்.

மலர் வெளியீடு:

செந்தமிழ்ச் செல்வி பொன்விழா மலரினை வெளியிடும் முகத்தான் உயர்திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ். அவர்கள் தமது உரையில்,

''செந்தமிழ்ச் செல்வி தமிழுக்கு ஒரு கண்ணும், சைவத் திற்கு ஒரு கண்ணுமாக அமைந்து வெளிவந்து கொண்டிருக் கின்றது. இந்த மலரில் நால்வர் திருக்கோயில் என்று ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. அந்த நால்வர் திருக்கோயில் திருப்பணி செம்மையாக நடைபெற அறங்காவல் துறையினர் தக்க உதவிகளைச் செய்வார்கள். செந்தமிழ்ச் செல்விக்கும் அற நிலையத்தார் ஆதரவு தருவர். இச் செந்தமிழ்ச் செல்வி பொன் விழா நல்ல முறையில் நடைபெற நீங்கள் எல்லாரும் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இம் மலரை வெளியிடு கிறேன்'' என்றார்.

பாராட்டுரை:

ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் பாராட்டுரை வழங்குகையில்,

"தமிழ்நாட்டில் தமிழ் எப்போதும் இருக்கும். அதில் சந்தேகமே வேண்டாம். தமிழ்ப் புலவர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும் 'நோட்ஸ்' போட்டுக் கொண்டே காலங்கழிக்கிறார்களே யொழிய தமிழுக்குச் செய்ய வேண்டிய எவ்வளவோ காரியங்களைச் செய்வதில்லை. சுப்பையா பிள்ளையவர்கள் மேலும் மேலும் தமிழ்த் தொண்டு செய்யத் தமிழ்ப் புலவர்கள் உதவி செய்ய வேண்டும். தமிழுக்குத் தொண்டு செய்துவரும் சை. சி. நூற்பதிப்புக் கழகத்தைப் பாராட்டுகிறேன். செந்தமிழ்ச் செல்வியைப் பாராட்டுகிறேன். அதன் பணிகள் மேலும் மேலும் வளரவேண்டும் என வாழ்த்துகிறேன்" என்றார்.

டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கள், தமது பாராட்டுரையில்,

"நாடு விடுதலை பெற்று—மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப் பட்டுத் தாய் மொழியே பாட மொழியாக இருக்க வேண்டும் என்று அறிஞர்கள், அரசியல் வாதிகள், கல்வித் துறையினர் எல்லோரும் ஒப்புக்கொண்டு, பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, தமிழிலே அறிவுத் துறைக்காக—அறிவு வளர்ச்சிக்காகப் பல்வகை அறிவுத் துறைகளில் இருக்கின்ற உண்மைகள் தமிழ் மக்களிடையே பரவ வேண்டுமென்ற கொள்கைக்காக எத்தனை பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன? எத்தனை பத்திரிகைகள் 1977ஆம் ஆண்டிலே இருக்கின்றன?

"இப்படிப்பட்ட எந்த விதமான சூழ்நிலையும், மேடைப் பேச்சுகளும் மாநாடுகளும் ஊர்வலங்களும் இல்லாத காலத்தில் 'செந்தமிழ்ச்செல்வி' தொடங்கப்பட்டதென்றால் அவர்களுடைய முன்னோக்கை இன்று நாம் எண்ணிப் பாராட்டி வியக்கவும் அவர்களுக்கு நன்றி சொல்லவும் கடமைப் பட்டிருக்கிறோம். இந்தக் கூட்டம் அப்படிப்பட்டதொரு நன்றி தெரிவிக்கும் கூட்டம் என்று சொல்லவேண்டுமே தவிர ஒரு விழா என்று கூட சொல்லத்தேவை யில்லை.

"சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1600க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறது. எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நூல்கள் வெளி வந்துள்ளன என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

"தொல்காப்பியத்திலிருந்து தொடங்கி இன்றுவரை வெளி வந்திருக்கும் நூல்களைக் கணக்கிட்டால் ஒரு 40 ஆயிரம் நூல்

களுக்கு மேல் இருக்காது. இது கூட சற்று அதிகமான மதிப்பீடு என்கிருர்கள். இது ஜெர்மனி ஓர் ஆண்டிலே வெளியிடும் நூல்களில் 5 ஆயிரம் குறைவு.

"இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, தனிப்பட்ட ஒரு நிறுவனம் 1600க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறது என்ருல் அஃது எண்ணி வியக்கத்தக்கது!

"இன்று தமிழகத்தில் மூன்று பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டைவிடச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மூத்தது. தமிழ்ப் பணியில்—தமிழ் நூல்கள் வெளியிடுவதில்—தமிழ் மக்களுக்கு அறிவுக் கருவூலங்களை எடுத்து வழங்குவதில், சென்னைப் பல்கலைக் கழகத்தைவிட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மூத்தது; என்று கூறுவது உண்மையே தவிர உயர்வு நவிற்சியாகாது.

"ஊதிய அடிப்படையில் நூல்களை வெளியிட வேண்டும் என்று சுப்பையா பிள்ளையவர்கள் கருதியிருப்பார்களானுல் இந்த 1600 நூல்களில் ஒன்று கூட வெளி வந்திருக்காது. ஊதியத்தைக் கருதாமல்—கொள்கைக்காக,—தனது மொழி வளர வேண்டும்—தனது இனம் வாழ வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு நூல்களை வெளியிடுவது ஓர் அரசாங்கத்துக்கு ஏற்றதாக இருக்கலாம். பல்கலைக் கழகங்களுக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனுல், ஒரு தனி நிறுவனம் இத்தகைய பணியினைச் செய்தது என்ருல், நான் அறிந்த வரையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தவிர வேறு இல்லை. அதற்கு நன்றி சொல்லத் தமிழ் மக்கள் கடமைப்பட்டிருக்கிருர்கள்." என்ருர்.

டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியம் அவர்கள் தமது பாராட்டுரையில்,

"மக்கள் தொகையில் ஒரு சிலர்தான் குறிக்கோளோடும், நோக்கத்தோடும் வாழ்கின்றவர்களை நாம் காண்கின்ருேம். அந்த நிலையில் தமிழ் என்ற ஒரே நோக்கத்திற்காக வாழ்கின்ற ஒருவர்தாம் பெரியவர் தாமரைச் செல்வர் அவர்கள்.

"செந்தமிழ்ச் செல்வி நான் பிறப்பதற்கு முன்பே பிறந்த ஒன்று. தமிழ் இருக்கும்வரை அஃது இருக்க வேண்டும்; என்பது தான் என்னுடைய ஆசை—ஆர்வம். இது போன்ற இதழை நாம் வரவேற்கவில்லையென்ருல் தமிழ் எப்படி வாழும் என்பது தான் நான் அடிக்கடி நினைந்து வருந்துவது" என்று குறிப்பிட்டார்.

திரு. அ. உத்தண்டராம பிள்ளை, (ஐ. ஏ. எஸ். ஓய்வு) அவர்கள்.

“செந்தமிழ்ச் செல்வியைப் பற்றிப் பலர் பேசினார்கள். ஆனால், அந்த இதழுக்கு எப்படியெப்படி உதவி செய்யலாம் என்பது பற்றித்தான் இப்போது நாம் சிந்திக்க வேண்டும். இந்த இதழிலே விளம்பரம் கிடையவே கிடையாது. இவ்விதழ் தமிழுக்கும் சைவத்திற்கும் என இரண்டு நோக்கங்களுக்காகவே ஏற்பட்டது. எனவே, அரசாங்க உதவி இதற்குத் தேவை. அரசாங்க உதவியுடன் நூலகங்களிலெல்லாம் இதனைப் பரப்பலாம். திருக்கோயில்களிலெல்லாம் இவ்விதழ் இருக்க வேண்டும். இதற்குப் பலரும் உதவி செய்தல் வேண்டும்.

“தமிழே சிவம்; சிவமே தமிழ். தமிழ் என்பது சிவமயமானது. அத்தகைய தமிழ் - சைவம் ஆகிய இரண்டுக்கும் தொண்டு செய்து வந்த செந்தமிழ்ச் செல்வி 50 ஆண்டுகளைத் தாண்டி விட்டது. அஃது இன்னும் என்றுமுள தமிழ்போல் இருக்க வேண்டுமானால் எல்லாரும் உதவி செய்ய முன்வர வேண்டும். சுப்பையா பிள்ளை அவர்கள் 1920 இலிருந்து அல்லும் பகலும் இதற்காகவே உழைத்து வருகிறார்கள். எனவே செந்தமிழ்ச் செல்வி என்றும் வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்” என்றார்.

டாக்டர் பொற்கோ அவர்கள் :

“தமிழைப் பற்றிப் பேச ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஆனால், அதற்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கூர்ந்து நோக்கி, அவற்றைக் களைந்து வளர்ப்பதற்குரிய வகைகள் சில பேருக்குத்தான் தெரிகிறது. அதுமட்டும் போதாது. தனிப்பட்ட முறையில் தொடர்ந்து பணியாற்றக்கூட ஒருசிலர் தேவை. அந்த நெறியில் எடுத்துக்காட்டாக நிற்கக்கூடிய ஒரு குடும்பம் தாமரைச் செல்வர் அவர்களுடைய குடும்பமாகும். செந்தமிழ்ச் செல்வி மட்டுமன்று; ஒரு தலைசிறந்த நூலகம்; ஒரு தலைசிறந்த வெளியீட்டகம் ஆகியவற்றை அவர்கள் நடத்தி வருகிறார்கள். இந்த ஆற்றல் ஒரு பேராற்றல் என்றே குறிப்பிட வேண்டும்.

“மறைமலையடிகள் நூலகத்தில் உள்ளே நுழைந்தவுடன் 10 நிமிடங்களில் உங்கள் கைக்குக் கிடைக்கின்ற அளவில் முப்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் நல்லமுறையில் தொகுக்கப் பெற்று, வகைசெய்து வைக்கப்பட்டிருக்கின்றன.” என்றார்.

அவர் மேலும் பேசுகையில்,

“தன்மான உணர்ச்சி ஒன்றுதான் ஒரு நாட்டை உயர்த்த முடியும். அந்த உணர்ச்சி மறைமலையடிகளாரிடத்தும்

பெரியாரிடத்தும் இருந்தது. இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் தன்மான உணர்ச்சி இருவர்க்கும் பொதுவாக இருந்தது. தன்மான உணர்ச்சி இல்லாதவனுடைய மொழி உணர்ச்சி உண்மையான மொழி உணர்ச்சி ஆகாது. அது போலி உணர்ச்சி; தன்மான உணர்ச்சி உள்ளவனிடத்தில் பேச்சில், எழுத்தில் உண்மை இருக்கும். தன்மானம் ஒன்றுதான் மொழி உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி ஆகியவற்றுக்கு அடிப்படை.

தமிழன் வளர வேண்டும். தமிழன் வளர்ந்தால்தான்—வாழ்ந்தால்தான் தமிழ் வளரும். செந்தமிழ்ச் செல்வி தனித்தமிழ்ப்பற்றினால் தன்மான உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றியது என்றுதான் நான் கருதுகிறேன். புதிய கண்டுபிடிப்புகளைத் தமிழில் எழுத முன்வரவேண்டும். அப்போதுதான் தமிழ் வளரும். அத்தகைய பணிக்குச் செந்தமிழ்ச் செல்விதான் உதவி புரியக்கூடியது. தமிழ்த் துறைக்கு மட்டுமன்றி, மருத்துவம், கலை, பொறியியல் இன்னபிற துறைகட்கும் செந்தமிழ்ச் செல்வி போன்ற தனித்தமிழ் இதழ்கள் தோன்ற வேண்டும்'' என்றார்.

நன்றியுரை :

கழக ஆட்சியாளர், தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் இறுதியாக நன்றியுரை கூறு முகத்தான் குறிப்பிட்டதாவது,

''இந்தப் பொன் விழாவோடு இரண்டு விழாக்கள் சேர்ந்திருக்கின்றன. நான் அடிகளாரோடு தொடர்பு கொண்டது 1916. அதனாலே இஃது ஒருமணி விழா. தனித்தமிழ் இயக்கம் தோன்றியது 1916. அதனால் இது மற்றொரு மணிவிழா.

பதிப்புத் துறையிலே கூட்டுப் பங்கு நிறுவனமாக நடைபெற்று வருவது இக் கழகம். கழகம் தோன்றிய காலத்தில் என் தமையனார் அலைந்து திரிந்து பங்குகள் சேர்த்தனர். யானும் சேர்த்ததுண்டு. திரு. தி. சு. விசுவாத பிள்ளையவர்கள் நூறு பங்குகள் எடுத்து ஆயிரம் ரூபா கொடுத்தார்கள். அடுத்து இப்போது கழகச் செயற்குழுத் தலைவராக இருக்கும் திரு. காசி விசுவநாதன் செட்டியாரவர்கள் 100 பங்கு எடுத்தார்கள். இந்த இரண்டு விசுவநாதர்களும் சேர்ந்து இப்படி ஒரு நிறுவனத்துக்கு ஊக்கத்தைத் தந்தார்கள்.

1924 இல் என் தமையனார் திருநெல்வேலியில் சிவஞான முனிவர் நூல் நிலையத்தை அமைத்தார்கள். கழகத்திற்குத் தொடக்க காலத்தில் கட்டடம் கிடையாது. 1939-40 இல்

சென்னைப் பவழக்காரத் தெருவிலுள்ள கட்டடத்தை வாங்கினார்கள். பின்னர்த் திருநெல்வேலியில் இரு கட்டடங்கள்; சென்னையில் மறைமலையடிகள் நூல் நிலையத்திற்கு ஒரு கட்டடம் என்று கழகம் வளர்ச்சியடைந்தது.

மறைமலையடிகள் இறுதிக் காலத்தில் எழுதிவைத்த ஆவணத்தின்படி பொதுமக்களுக்குப் பயன்படக் கூடிய அளவில் 4000 க்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. அங்கே அரிய பல நூல்கள் இருக்கின்றன. சங்க இலக்கியப் பேழை, சமய இலக்கியப்பேழை, பள்ளி மாணவர்க்கு வேண்டிய பல்வகை நூற்பேழை, பிற்கால இலக்கியப் பேழை என்று நான்கு பேழைகளை உருவாக்கியிருக்கிறோம்.

இந்த முயற்சிகளுக்கெல்லாம் புலவர்கள், பேராசிரியர்கள் உதவ முன் வரவேண்டும். இங்கு இறை வணக்கம் பாடிய கூத்தரசு - இத் திருமண மண்டபத்தைக் கொடுத்துதவிய வள்ளல் ஏ. வி. மெய்யப்ப செட்டியார்—மற்றும் இங்கு வந்து இந்த விழாக்களைச் சிறப்பித்த பேராசிரியர்கள், புலவர்கள். விழாவிற்கு வருகைதந்த பெரியோர்கள் ஆகியோர்க்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

அரிய பெரிய மெய்ப்பொருள்களை அறிதல் வேண்டும்

நம் ஆசிரியர்கள் தம் காலத்திருந்த போது மக்களின் மனச்சார்பை அறிந்து, அவர்கள் பொருட்டுத் தழுவிப் பாடியிருக்கும் புராண கதைகளையெல்லாம் நாம் அப்படியே தழுவ வேண்டுமென்பது கட்டாயமாகாது. ஏனென்றால் அப்பனை வணங்கும் நமது சைவ சமயமும், அம்மையை வணங்கும் வைணவ சமயமும் இக்கதைகளைச் சார்ந்து பிழைப்பன அல்ல. இக்கதைகளின் உதவி வேண்டாமலே இவ்விரு சமயங்களும், மக்களின் இம்மை மறுமை வாழ்க்கைக்கு இன்றியமையாதன வாகிய அரிய பெரிய மெய்ப் பொருள்களினுலேயே அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆதலால், நம்முடைய சமயங்களின் உண்மைகளைச் 'சிவஞான போதம்' 'சிவஞான சித்தியார்' என்னும் உயர்ந்த அறிவு நூல்களில் விளக்கப் பட்டபடி இளம் பருவம் முதற்கொண்டே நம்முடைய மக்களுக்குக் கற்பித்து வர ஏற்பாடு செய்தல் வேண்டும்''

மறைமலையடிகள்

(மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை, பக். 194-195)



கழக நிறுவனர் உயர்திரு. வ. திருவரங்கம்
பிள்ளை அவர்களின் உருவப் படத்தை
முன்னாள் உயர்நீதி மன்ற நடுவர்
உயர்திரு. எஸ். மகராசன் அவர்கள்
திறந்து வைத்தல்



டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கள்
'செந்தமிழ்ச் செல்வி' பேழையைத்
திறந்து வைத்தல்.



'செல்வி'யின் முதல் ஆண்டு இதழாசிரியர் குழுத்தலைவர்
மணி. திருநாவுக்கரசு முதலியார்

இரு பெருவிழா வாழ்த்துகள்

சைவமும் தமிழும் தன்னிரு கண்ணெனப் போற்றி வளர்த்து வருவது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். அக் கொள்கையையே தன் குறிக்கோளாகக் கொண்டு அரை நூற்றுண்டிற்கும் மேலாகச் செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும் தொண்டாற்றிச் சிறந்தவர் சிவத்திரு மறைமலையடிகளாராவர். கழகத்தின் வளர்ப்புச் செல்வியாம் செந்தமிழ்ச் செல்வியும் அரை நூற்றுண்டுக் காலமாகத் தமிழ்ப் பணியும் சிவப்பணியும் இனிய முறையில் செய்து சிறந்துள்ளது.

திருப்பெருந்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
தருமையாதினம்

நூற்றுண்டு விழாவுக்குரிய பெரியார் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் தாயுந் தந்தையுமாவார். அவருடைய பெருமையினைச் சிற்றறிவுடையவனாகிய நான் எவ்வாறு விவரிக்க முடியும். 1908—1909 என நினைக்கிறேன். அப்பொழுது நான் ஓர் இளம் மாணவன். எங்கள் ஊரில் மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் சைவசித்தாந்த சபைக் கூட்டம் நடந்தது. பெருங் கூட்டம். மக்கள் அவர்பால் கொண்டிருந்த மதிப்பினை அக் கூட்டமே விளக்கிற்று.

என்மனம் கவர்ந்துள்ள பெரியவர்களுள் அவர் தலைசிறந்து விளங்குகின்றார். அவரால் உருவாக்கப்பட்டுத் தலைசிறந்த மாணிக்கமாக விளங்கும் பேராசிரியர்கள் எண்ணிறந்தவராவர். உலக மொழிகளுள் தமிழ் சிறந்து விளங்க வேண்டும் என்று பாடுபட்டாரேனும், மொழி வெறி கொண்டவரல்லர். அவரைப் போல் ஆங்கில அறிஞர் எழுதிய நூல்களைப் படித்துச் சாரம் எடுத்துக் கொண்டவர் வேறு ஒருவர் உண்டோ என ஐயங் கொள்கிறேன்.

வடமொழியில் சிறந்த அறிஞராக விளங்கிய அடிகளாரது சாகுந்தல மொழிபெயர்ப்பு ஒருவராலும் மறக்க வொண்ணாத நூலாகும்.

இவருடைய தொண்டின் பெருமையால் 'செந்தமிழ்ச் செல்வி' தோற்றுவிக்கப்பட்டுத் தமிழுலகுக்குப் பெருந்தொண்டு செய்து வருகின்றது. அஃது அத் தொண்டினை எதிர்காலத்திலும் செவ்வனே செய்துவரும் என்பதில் சந்தேகமில்லை.

டி. எம். நாராயண சாமிப்பிள்ளை, எம்.ஏ., பி.எல்.
திருச்சி

தனித் தமிழ்த் தந்தையாகவும் தலைசிறந்த இலக்கிய ஆய்வாளராகவும் விளங்கி, அருந்தமிழ்க்குப் பெரும்பணி ஆற்றி யவர் மறைமலையடிகள். அவர் நூற்றாண்டு விழாவைத் தாங்கள் கொண்டாடுவது பெரிதும் பாராட்டுக்குரியது. அத்துடன் திங்கள்தோறும் சிறப்புறத் தாங்கள் நடத்திவரும் 'செந்தமிழ்ச் செல்வி' இதழின் பொன்விழாவையும் இணைத்து நடத்துவது பொருத்தமானதும் புகழத்தக்கதுங்கூட.

நா. மகாலிங்கம், பி.எஸ்ஸி., எப் ஐ.இ., சென்னை

தமிழுக்காக மறைமலையடிகள் எடுத்துக்கொண்ட முயற்சி களையும், செந்தமிழ்ச் செல்வியையும் நல்ல முறையில் பாது காத்துச் சிறப்பித்து வரும் திரு. வ. சுப்பையா அவர்களின் சீரிய செயல்திறம் கண்டு அவரைப் பாராட்டுகின்றேன். வாழ்க அவர்தம் தமிழ்ப் பணி.

வி. தாமஸ், தேவகோட்டை

தனித்தமிழ் இயக்கம் கண்ட அடிகளார்க்குத் தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்திலும் பெருவிழா எடுத்து நன்றிக்கடனாற்ற வேண்டியது தமிழர் கடமை. அதை நன்முறையில் எடுத்துக் காட்டும் வகையில் விழாவெடுத்துச் சிறப்பிதலல் மகிழ்ச்சியைத் தருகிறது.

சே. மு. கோபாலகிருட்டிணன்,
தலைவர், பெங்களூர் தமிழ்ச் சங்கம்

தனித்தமிழ் இயக்கத்தின் ஆற்றல் மிகு சான்றோராகிய மறைமலை அடிகள் நற்றமிழின் நிலையினை நானிலமெங்கும் பரப்பிய நாயகர் ஆவார்.

ஆராய்ச்சியாளர்க்கு அருந்தமிழ்ப் பெட்டகமாகத் துலங் கிடும், 'செந்தமிழ்ச் செல்வி' திறனாய்வு நோக்கில் உருவாக்க விழையும் கருத்தோவியங்கள் பலப்பல. வரலாற்றுப் பதிவே டாகவும், வண்டமிழ்க் கருவூலமாகவும் விளங்கிடும் செல்வி நிவந் தோங்கிட உளமுவந்து வாழ்த்தி வழுத்துகிறோம்.

பா. வளன் அரசு, நெல்லை

பேரறிஞர் மறைமலையடிகளாரின் புகழும் பீடும் பெருமை யும் தாங்கள் இல்லாவிட்டால், இவ்வளவு சிறப்புற முடியாது. "காரல் மார்க்ஸ்—ஏஞ்செல்ஸ் இல்லாவிட்டால் இல்லை; கம்பன்—சடையப்பவள்ளல் இல்லாவிட்டால் இல்லை; அடிகளார்—சுப்பையா பிள்ளை இல்லாவிட்டால் இல்லை" என்கிற அளவுக்கு அன்று முதல் இன்று வரை உழைத்துவரும் தங்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புலவர் ந. இராமசாமி, எம்.ஏ., எம்.லிட்., அம்மாப்பேட்டை

அடிகளாரின் சிந்தனைக் கருவூலம் சிதருமல் செயல்பட்டு வரும் தங்களுக்குத் தனித் தமிழியக்கம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

புலவர் சி. இராமசாமி, ஒற்றைக்கடை

விழாக்கள் சிறக்க !

மறைமலையார் நூற்றுண்டு நிகழ்ச்சி—வாழ்வில்
மறந்திடவே முடியாத மகிழ்ச்சி—தாழ்வில்
நிலையகற்றித் தமிழ்ப்பெருமை
நிறுவிய நல் விழா அழைப்பைப்
பெற்றேன்—இன்பம்—உற்றேன்.
நிறைவுதரும் செல்வியும் பொன் அணிந்தாள்—மேலும்
நிகரில்லாப் பணிதொடரத் துணிந்தாள்—சூழும்
பகைநீக்கித் தமிழ் ஓங்கப்
பயன்தரும்இவ் விழாக்களெல்லாஞ்
சிறக்கும்—நன்மை—பிறக்கும்

புலவர் பெ. முனியப்பன், கூகலூர்

வாழ்க மறைமலையடிகளார் புகழே !

மறைமலை யடிகள் நூற்றுண்டு விழாவில்
செந்தமிழ்ச் செல்வியாம் நந்தமிழ்ப் பாவை
நடைநயம் தொடைநயம் பொருணயம் நூனயம்
எழில்நயம் ஆதி எல்லா நயங்களும்
மிளிர ஓர் அரைநூற் ருண்டு முதிர்ந்தும்
இளமையின் துடிப்புடன் இன்றும் உலாவரும்
அருந்தமிழ் ஏடாம் மருந்தினை நாமுண
விழாக்கண் டனரே வெற்றிக்கு வித்திட
வாழ்க மறைமலை யடிகளார் புகழே
வாழ்க அன்னுர் அருந்திறல் நண்பர்
பொன்றுப் புகழுடைத் தாமரைச் செல்வர்
வாழ்வே கழக வாழ்வென ஓயா
துழைத்துழைத் தோடாய்ப் போன செம்மல்
செந்தமிழ்க் குரிசில் செம்மைசால் பண்பினன்
சுடரொளிச் சுப்பையா திடமுடன் வாழ
நெல்லை யப்பனும் அம்மை வடிவும்
எல்லையில் அருளாம் அமுதினைப் பொழிய
ஏந்து புகழொடு இம்மையும் மறுமையும்
தாமரைச் செல்வர் இனிதுதொண் டாற்றுக
என்றே வாழ்த்தி வணங்கிஇன் புறுவாம்.

பேராசிரியர் க. வ. முத்தையா, எம்.ஏ., நெல்லை

புகழ்காக்கப் புறப்பட்ட அடிகள் வாழ்க!

பொன்னாட்டுக் காவியத்துப் புதையல் போலப்
புகழ்காக்கப் புறப்பட்ட அடிகள் எங்கள்
தென்னாட்டுத் திலகமாம் தண்டமிழ்ச் சீலன்
புகழ்பற்றித் தமிழ்பாடும் தரணி பாடும்
தன்னாட்சி தலைக்கேறத் தரமில்லா மொழியின்
சிறுகூட்டம் படையெடுத்துச் சீறி வந்தே
எண்ணாலும் எழுத்தாலும் தொடமாட் டாத
இழிநாசம் செய்ததனை எதிர்த்த தமிழன்
திக்கெட்டும் தமிழன்புகழ் பரவ நோற்றுக்
கலவைத்தமிழ் நடுவினிலே தனித்தமிழ் நாட்டி
உடலுருக தமிழொன்றே கருதி வாழ்ந்த
மறைமலையார் நூற்றாண்டு விழா வாழ்க!

சு. திருநாவுக்கரசுப்பிள்ளை, கொற்கை.

விழிப்புற்று மெய்ம்மைகாண விரிந்தநல் ஒளியே!

மொழிப்பற்று தனைமு ழக்கும்
முரசமே! அறமும் அன்பும்
கொழிப்புற்ற தமிழ்த்தாய் வண்மைக்
குரலே!நற் றமிழர் நாட்டின்
செழிப்புற்ற சீர்மை பாடும்
தேனிசைக் குயிலே நாங்கள்
விழிப்புற்று மெய்ம்மை காண
விரிந்தநல் ஒளியே! வாழி!

புலவர் பொதிகைச் செல்வன், பவானி

விழாவால் தமிழீர் விழித்தெழுந்திடுவீர்!

சைவசித் தாந்தத் தமிழ்ப்பணிக் கழகம்
வளர்க! தெய்வீகம் வழங்கி வாழ்க!
புலவர் புரவலர் போற்றிடும் எங்கள்
நலம்புரி சுபவேள் நற்புகழ் ஓங்குக
எண்ப தாண்டுடன் இனும்பல் லாண்டுகள்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் அருளால்
பெறுக இன்பெலாம் பெற்று வாழ்க!
தனித்தமிழ்ப் பெரியார் தமழ்மறை மலையார்
இனித்திடும் அடிகளார் இந்நூற் றுண்டின்

விழாவால் தமிழீர்! விழித்தெழுந் திடுக!
தமிழ்மொழி ஓம்புக! தமிழர் பண்பெலாம்
வளர்வுற அனைவரும் வளந்தரும் உளமுடன்
செழித்திட வாழ்த்துதும் செந்தமிழ்ச் செல்வியின்
சீரெலாம் திசைதொறும் சென்று வாழ்த்துதுமே!

முருக கருணையானந்தா, மதுரை

நச்சியே வாழ்த்துகின்றேன்!

தமிழினம் விழிப்புற் றோங்கத்
தனித்தமிழ் நடைஏ றுக
அமிழ்தினும் இனிய வாறு
அரியதொண் டாற்றி வாழ்ந்த
கமழ்புகழ் அடிக ளார்க்குக்
கண்டிடும் விழாச்சி றக்க
இமைஇறை அடிநி னைந்து
இருக்கிறேன் வாழ்த்து! கொள்க!
இலக்கிய நெறிகள் காட்டி
இனியநல் சமய மான
அலகிலாக் கருணை யோங்கும்
அரும்பெறல் சைவத் திற்கும்
பலவழி தொடர்தொண் டாற்றும்
பாங்குடைச் செல்வி காணும்
நலமுற விழாநா ளின்று
நச்சியே வாழ்த்து கின்றேன்.

மேலைத் தமிழ்க் குமரன், திருச்சி

மற்றும் கீழ்க்காணும் பெருமக்களிடமிருந்தும் கம்பிவழியும், கடிதவழியும் வாழ்த்துச் செய்திகள் வந்துள்ளன.

பேராசிரியர் ஆலால சுந்தரம் செட்டியார், தாம்பரம்; புலவர் ஆ. பழநி, காரைக்குடி; பேராசிரியர் தி. வ. காந்திமதி நாதன், மாயூரம்; செ. வைத்தியலிங்கன், எம் ஏ., அண்ணாமலை நகர்; புலவர் கோ. வில்வபதி, சென்னை; தணிகை உலகநாதன், சென்னை; பேராசிரியர் மீ. பொன். இராமநாதன் செட்டியார்; சிவபழமலை, பெண்ணாடம்; ந. ப. தணிகை அரசு, வாலாசாபாத்; புலவர், சேதுராமலிங்கம், செயலர் தஞ்சை மாவட்டத் தமிழாசிரியர் கழகம்; டாக்டர் இ. அண்ணாமலை, மைசூர்; சு. திருஞானம், மதுரை; டாக்டர் எம். நடராசன், சென்னை; டி. பி. சித்தலிங்கையா மதுரைப் பல்கலைக் கழகம்; வா. திருமலை, கோயமுத்தூர்; மா. காசிவிசுவநாதன், திருச்சி; வி. கே. நடராஜ்,

மைசூர்; டி. பி. எம். பெரியசாமி, மதுரை; சுப. சண்முக நாதன், முதல்வர் பச்சையப்பன் கல்லூரி, சென்னை; மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, சென்னை; பேரா சிரியர் கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்; எல். நாராயணன் செட்டியார், மதுரை; ப. சோதிமுத்து, மதுரை; அ. ம. வேணு கோபாலன், பெங்களூர்; பூ. சாம்பசிவம், எம்.ஏ., பி.டி. தூத்துக் குடி; ஆபிரகாம் அருளப்பன், பி.ஏ., நெல்லை; டாக்டர் வ. சுப. மாணிக்கம், அண்ணாமலைநகர்; பேராசிரியர் வ. பெருமாள், கோலார் தங்கவயல்; மு. கண்ணப்பன், பவானி; ச. சாம்ப சிவன், எம்.ஏ., மதுரை; பேராசிரியர் சுப. அண்ணாமலை, மதுரை; க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.எல்.டி., மதுரை. மற்றும் பலர்.

கழகத்தின் நன்றி

மறைத்திரு மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவும், செந்தமிழ்ச்செல்வி பொன்விழாவும் சிறப்புற நடைபெற, மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தைக் கொடுத்துதவிய வள்ளல் திரு. A. V. மெய்யப்ப செட்டியார் அவர்கட்கும், விழாச் செய்தி களை ஒலி பரப்பிய சென்னை அனைத்திந்திய வானெலி நிலையத் தார்க்கும், நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி (T. V.) மூலம் பரப் பிய தொலைக்காட்சி நிலையத்தார்க்கும், செய்திகளை நல்லமுறை யில் வெளியிட்டுதவிய தினமணி, முரசொலி, விடுதலை, தினத் தந்தி போன்ற செய்தித் தாள்கட்கும், விழா மலர்கள் சிறப்புடன் மிளிர விளம்பரங்கள் தந்துதவிய வணிக நிலையங்கட்கும், விளம்பரங்கள் பெற்றுத்தந்த கழக அன்பர்கட்கும், விழாவில் பங்கேற்று அடிக ளாரைப் பற்றியும், செந்தமிழ்ச்செல்வியின் மாண்புகள் பற்றியும் அரிய உரையாற்றிய அறிஞர் பெருமக்கட்கும், குறிப்பாக விழாத் தலைவர்களாக அமர்ந்து விழாவினைச் சிறப்பித்த சட்டப் பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன், குன்றக்குடி அடிகளார், சிலம்புச் செல்வர், முத்தமிழ்க்காவலர் ஆகியோர்க்கும் மற்றும் இவ்விருபெரு விழாக்களும் செம்மையாக நடந்தேறப் பல்லாற் றனும் துணைபுரிந்த அன்பர்கட்கும், வருகைதந்து சிறப்பித்த அன்பர்கட்கும் கழகத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௫௧, பரல் ௫, பக்கம் உஉஅஇன் தொடர்ச்சி)

> "பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
> ஆறுமுன் கருவுட் பட்டது; அவ்விதி அனுப வத்தால்
> ஏறிடும்; முன்பு செய்த கன்மமிங்கு; இவற்றிற்கு ஏது;
> தேறு நீ, இனிச் செய் கன்மம் மேலுடல் சேரு மென்றே"
>
> "வண்டுக ளாகி மாறும் மயிர்க்குட்டி; மற்றோர் சென்றுப்
> பண்டைய உருவந் தானே வேட்டுவ னய்ப்பி றக்கும்;
> கண்டுகொள் யோனி யெல்லாம் கன்மத்தால் மாறும்"

என்பது சிவஞான சித்தியார். (99, 133).

பிறவிகள் பலர்க்குப் பலவகையாக மாறி அமைதல் கன்மத்தால் என்று நாம் அறிந்துகொள்ளலாம். இச் செய்யுளில் வண்டுகளும் குளவிகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மயிர்க் குட்டிப் புழு வண்டாகி மாறுவதும் ஒரு புழுவின் பழைய வடிவம் பின்னுற் குளவிபோல் மாறுவதும் வினையினுல் மாறுவனவே என்பது வருகிறது. ஒரு புழுவைக் குளவி தன்னைப் போல் மாற்றி ஆக்குதற்குக் காரணம், வினை என்பதும் இங்கே கூறப் பட்டிருக்கிறது.

இறைவன் கட்டுப்படான்:

இவ்வுண்மையைச் சொல்லும்போது, ஒரு புழுவைக் குளவி தன்னைப்போல் மாற்றுவதானுலும், நிமித்த காரணனுகிய இறைவன் அச் செயலுக்குங் காரணமாய் இருக்கிருன் என்பது தெரிகிறது. கன்மத்தால் மாறும் இச் செயலில் இறைவனும் கன்மம் முதலியவற்றிற் கட்டுப்படுவானே, என்று தோற்றும். மலங்கள் இறைவனையும் பிணிக்கும் என்பது எப்படிப் பொருந்தும்?

ஒரு செயலைச் செய்யும்போது அதனுல் கட்டுப்பட்டும் ஒருவர் செய்யலாம், கட்டுப்படாமலும் செய்யலாம். வழக்கு மன்றத்தில் ஒரு வழக்கை நீதிபதியும், வழக்கறிஞர்களும், சான்று கூறுவோரும், குற்றவாளியும் ஒருங்கிருந்து அலசு கிருர்கள். ஆனுல், குற்றவாளி அவ் வழக்கில் கட்டுப்பட்டிருக் கிருன். நீதிபதி முதலியோர் கட்டுப்படாமலே அதனில் ஈடுபடு கிருர்கள்.

ஒரு தொழில் தலைவருக்குத் தொழிலிலும் பயனிலும் கட்டுப் பாடு இருப்பது போலவே, தொழிலைத் தணிக்கை செய்வார்க்கும் இருப்பதில்லை; உலக நிலைகளில், பல இவ்வாறு வருகின்றன.

ஆசிரியர் மெய்கண்டார் இதற்கு இரண்டு உவமைகளைக் கூறுகிறார். மலங்களில் இறைவன் கட்டுப்படாமலே, உயிர்கள் கட்டுப்பட்டுச் செய்யும்போது துணை புரிகிறான். காலம் என்பது ஒரு நுண்ணிய மாயைப் பொருள். ஒவ்வொரு காலத்தில் மக்கள் ஒவ்வொன்றைச் செய்யும்போது, அவர்கள், கால நிகழ்ச்சி களால் கட்டுப்படுகிறார்கள்; காலம் கட்டுப்படுவதில்லை. கனவும் அங்ஙனமே. கனவு காணும்போது உயிர்கள் அதனில் தோய்ந்து காண்கின்றன. ஆனால், அவ்வுயிர்கள், விழிப்பு நிலை யில் இருக்கும்போது, அக் கனவு நிகழ்ச்சிகளில் கட்டுப்படுவ தில்லை. ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் இவ்விரண்டு நிலைகளையும் நன்கு அறிவர்.

இரண்டு உவமைகளுக்குக் காரணம் :

காலம் உயிர்களுக்குக் கட்டுப்படவில்லை; உயிர்கள் கனவு நிலைக்குக் கட்டுப்படவில்லை. ஒன்று கருவி; மற்றொன்று அவத்தை; இவை அறியாமைகள்; உயிர்களோ சிற்றறிவுப் பொருள். மாறுபட்ட இவ் விரண்டையும் மெய்கண்டார் எடுத் துக்காட்டாகக் காட்டுகிறார். அறியாமைப் பொருளும், சிற்றறி வுப் பொருளுமே இங்ஙனம் கட்டுப்படாமல் இருக்கும்போது, பேரறிவுப் பொருளாகிய இறைவன் எப்படிக் கட்டுப்படுவான் என்று கேட்பதுபோல் இவ்விரண்டு உவமைகளும் உள்ளன.

இறைவன் செய்யும் ஐந்தொழிலிலும் இங்ஙனம் அவன் கட்டுப்படாமலே பற்றற்றுச் செய்கிறான். உலகம் தோன்றுதல், இருத்தல், அழிதல் முதலியன அவன் தொழில்களே; தோன்றிச் சிலகாலம் நிலைகொள்வதைப் போலவே, அழிதலும் பற்றற்றே நிகழ்கின்றது.

அழித்தலில் மிக்க இரக்கம் :

தோற்றுதலிலும் சிலகாலம் இருக்கவைத்தலிலும் ஏனை மறைத்தல் அருளலிலும் கூட இரக்கம் நன்கு புலப்படக்கூடும். அழித்தலில் அவ்வளவாகப் புலப்படாமற் போகலாம். வெளிப் படையாய்ப் புலப்படாவிட்டாலும், மற்றத் தொழில்களைவிட அழித்தல் தொழிலில் இரக்கம் மிகுதியாகவே தெரிகிறது. ஆனால், மறைவாய் இருக்கின்றது. அப் பெருமான் இரக்கத்தால்

நைந்து கொண்டேதான் அழிக்கின்ருன்; கடமை உந்திக் கொண்டிருக்கிறது. மறக் கருணை கொண்டு, அழித்தலைச் செய்யவேண்டி யிருக்கிறது; இரக்கம் அந் நிலையில் மிகுதி யாகவே பீறிட்டுப் பெருகுகிறது!

ஒடுக்குவோனே ஆக்குவோன்:

குறை சொல்லும் ஒருவர் நல்லெண்ணத்தோடு சொல்லு வதானல், அக் குறையைத் தீர்ப்பதற்காகவே அவ்வாறு சொல்லுவார்; குறை தீர்க்கும் உரிமை உடையவரே குறை சொல்லவும் உரிமை யுடையவர்! உயிர்களின் மலங்களைத் தீர்க்கும் நோக்கமும் செயலும் உடைய இறைவனே, கன்மத் தின்படி அழித்தலுஞ் செய்ய நேர்கிறது.

அறியாமையைத் தரும் ஆணவ மலங் காரணமாகக், கருவி களாகப் பயன்படும் மாயை மலத்தின் விரிவை கன்மத்தால் ஒடுக்கிப், பிறவிகளில் மாறுதலைச் செய்யும் அக் கன்மத்தையும் பெருமான் தீர்க்கிருன். இதனல் ஒடுக்குவோனுக்கே படைக்கும் உரிமையும் இருத்தலை அறிந்துகொள்ளலாம்.

ஆதலால் எந்நிலையிலும், முதல்வனைச் சார்ந்து அப் பெரு மான் இயல்புகளால் இன்புறுவதே எல்லார்க்கும் கடமையாய் இருக்கிறது.

இவ்வாறு மெய்கண்டார் தமது முதல் நூற்பாக் கருத்துக் களை முறைப்படுத்திக் கொண்டார்; இனிப், பல சமயக் கருத் துக்களின் வகைப்படி, முதல் நூற்பாக் கருத்துக்களைப் பொருந்துமாறு உறுதிப்படுத்திக்கொண்டு, இரண்டாம் நூற்பா வுக்குச் செல்வோம்.

சமயச் சிந்தனைகள்:

அன்பர்களே! மக்கள் சிந்தனை பலவகைப்பட்டது. சமய நெறி பற்றியும் மக்கள் பலவாறு சிந்திக்கின்றனர். சிந்திப்பது சிந்தனை உழைப்பு. ஆதலால் அவற்றை எளியவாகத் தள்ளி விடாமல் அவரவர் சிந்தனையையும் நன்றியுடன் நினைந்து போற்றிக்கொள்ள வேண்டும். ஏனென்ருல், மேல் மேல் சிந்தனைகளுக்கு அவை காரணமாகவும் உதவியாகவும் உள்ளன. அப்படிப் போற்றிக் கொள்வதற்காகத்தான் 24 பிரிவுகளாகச் சமயச் சிந்தனைகளைப் பெரியோர் வரிசைப்படுத்தினர்.

அவற்றில், சிவஞானபோதத்தின் முதல் நூற்பாவினு லேயே, 20 வகைச் சிந்தனையாளர்களின் சிந்தனைக்குமேல் உண்மை தேறப்படுகின்றது. இருபது வகைச் சிந்தனைகளை

மறுப்பதனால் அவற்றை இகழ்வாக எண்ணுவதற்கில்லை. மறுத்து மேற்செல்வது எப்போதும் உண்மை காண்பதற்கு வழி கோலுவதாகும்.

விஞ்ஞானிகளுள் ஒருவர் கண்டுபிடித்ததற்கு மேல் மற்றொருவர் கண்டுபிடிக்கின்றார். முன்னவர் கண்டுபிடித்தது பின்னவர் கண்டுபிடிப்புக்கு உதவியாய்த் துணை செய்கிறது. அதனால் முன்னவர் கண்டுபிடிப்பு, மிகவும் பாராட்டத்தக்கதாய் நன்றியுடன் போற்றப்படுகிறது. பின்னவர் கண்டுபிடிப்பினால் அது மறுக்கப்பட்டாலும், மறுத்து மேற்செல்வது உண்மை தேர்வதற்கு இடமாய் இருப்பதனால், முன்னவர் பின்னவர் என்னும் இருசாராரும் அன்புடன் பாராட்டிக்கொள்வரே அல்லாமல், தவறாகப் பாவிப்பதில்லை. அதனால் மறுப்புக்கும் மேற்செல்வதற்கும் அனைவரும் அன்பு கொள்ளுதற்குரியர் என்பது பெறப்படும். பின்னவரும் மேலும் பின்னவர் கண்டுபிடிப்புக்குக் காரணராவார்; இவ்வாறு உண்மை நாட்டத்துக்கே சிந்தனைகள் பயன்படுகின்றன. சமயச் சிந்தனைகளும் அத்தகையனவே.

விஞ்ஞான முன்னேற்றத்தோடு சமயச் சிந்தனைகளும் ஒத்து ஒன்றுக்கொன்று வளர்ச்சிக்கு அடிகோலுவனவாகும். ‘புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச் சமயம்’ என்னும் வரிசை முறையே, இவ்வுண்மையை உணர்த்தும். ஒவ்வொரு சிந்தனையும் அம் முறைபற்றிய வளர்ச்சிக்கு வித்தாய் உள்ளன.

‘சிவஞான சித்தியார் சுபக்கத்’தில் அதன் ஆசிரியர் அருணந்தி சிவனார், சிவஞான போத நூற்பாக்களின்படி, சமயவாதிகளின் சிந்தனைகளை விளக்கிச் செல்கிறார். அம் முறையில், சமயத்தார் பலர் கருத்துக்களைப் பற்றிய குறிப்புகள் இங்கே வருகின்றன.

அருணந்திசிவம், தமது ‘சித்தியார் பரபக்கத்’தில், சமயச் சிந்தனைகளைச் சித்தாந்தப் பார்வையால் அலசி ஆராயும் கருத்து முறைகள் வேறு; அவற்றிலும் சில இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளில் முன்பு வந்தன.

சிவஞானபோதம் முதல் நூற்பா கடவுள் ஒருவன் உண்டு என்பதை நிலைநிறுத்துவது: அதை அது மூன்று வகையாகப் பிரித்துக்கொள்கிறது.

முதற் பிரிவு : காணப்படும் உலகம் ஒரு காலத்தில் தோன்றிச் சிலகாலம் நின்று அதன்பின் அழிந்து போவதாய்

இங்ஙனம் முத்தொழில் உடையதாய் இருக்கிறது. இம் முத்தொழில் உடைமைக்குக் காரணம், உலகம் உறுப்புக்களோடு காணப்படுவதாலும், அவை பலவாய்க் குறித்துணரப்படுவதாலும், எல்லாம் அறியாமைப் பொருளாகவும் அறியாமைப் பொருள்போலவும் இருப்பதனுலும், என்பது.

'உலகம் முத்தொழில் உடையது' என்னும் இம் முதற் கருத்திலேயே உலகாயதர் சிந்தனை மாறுபடுகின்றது.

உலகியற்கையில் காட்சிக்கு மட்டும் புலப்படும் நிலம், நீர், தீ, காற்றுக்களைப் பொருள்களாகவும் நிலையாகவும் கொண்டு அவற்ருல் மக்கள் இன்புற்று வருதல் சிறப்பென்று உலகாயதர் கருதினர். அவர்கள் இருவகைப்படுவார்கள். 'உலகாயதர்' என்றும், 'சாருவாகர்' என்றும் சொல்லப்படுவர்.

உலகாயதர், உலகத்தால் மக்கள் இன்புறுதலைப் பிறவிப் பயன் என்பவர்கள். சாருவாகர், உலகியற்கை நிலம் முதல் நான்கு வகைகளே என்பவர்கள். இவ்விரு சாரார்க்கும் காட்சி யளவையே முக்கியம். கருதல் அளவையும், உரை யளவையும் முழுதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

உலகாயதர் மூன்று கேள்விகள் கேட்கின்றனர்; இம் மூவகைக் கேள்விகளுக்கும் சிவஞானபோதம் முதல் நூற்பாவே விடை கூறுகிறது.

'உலகத்துக்குத் தோற்றமும் ஒடுக்கமும் ஏன் சொல்ல வேண்டும்? அவையெல்லாம் கண்ணுக்குத் தெரியவில்லை; உலகம் இப்படியே எப்பொழுதும் நிலையாயிருக்கிறதென்றே முன்னேரும் சொல்லி வந்திருக்கின்றனர்' என்பது.

அதற்கு இவர்கள் (சித்தாந்த மெய்ப்பொருள் தேர்ந்தவர்), 'நீங்கள் காட்சி அளவையில் மட்டும் கருத்துடையவர்கள்; 'உலகம் நிலை' என்பதனுல், அது உள் பொருள் என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். உள்பொருள் ஒரு காலத்தில் தோன்றுதலும் பின்னெரு காலத்தில் அழிதலுமாய் இருத்தல் காட்சிக்கே தெரிகின்றது. தோற்றம் இல்லாமல் நிலை எப்படி? மறைதல் இல்லாமல் தோன்றுதல் எப்படி? சில தோன்றுவதை நேரில் பார்க்கிருேமே; மறைந்து போவதையும் கண்கூடாக அறிகிருேமே. ஆகவே உள்பொருள் என்பது தோற்றத்தையும் மறைவையும் துணையாகக் கொண்டுதான் நிலைகொண்டிருக்கிறது; இதற்குக் கருதல் முதலிய அளவைகள் கூடத் தேவையில்லை; என்பர்.

தோற்றிய திதியாய் உலகம் உள்ளது. ஒரு சில ஒருங்கே அழிவதையும் நேரில் பார்க்கிறோம், அங்ஙனம் அவை அழிவ தற்குக் காரணம் ஓரினமாய் இருத்தலே ஆகின்றது. அது போல உலகம் முழுதும் ஓரினம் என்னும் காரணத்தால், ஒரு காலத்தில் ஒருங்கே மறைதலும் கூடும் என்பதும் தெரிய வில்லையா?' என்று இங்ஙனம் சிவஞான போதம் உலகாயதர் கருத்துக்களையும் தன்னுட்கொண்டு ஆராய்ந்து, அவற்றைக் கடந்தும் மேற்செல்லுகிறது.

மற்றொரு கருத்தை அவர்கள் தெரிவிக்கின்றனர்; "தோன்றுதலும் மறைதலும் உலகத்துக்கு 'இயற்கை' என்றால் என்ன?" என்பது.

'இயற்கை என்று சொல்லுவதானால் செயற்கை கூறக் கூடாது; செயற்கை என்று சொல்லுவதானால் இயற்கை எனக் கூடாது; மாறுபட்ட இவ்விரு தன்மைகளையும் ஒருபொருட்கே கூறுதல் பொருந்தாது' என்று இவர்கள் கூறுவர்.

'அப்படிச் சொல்லவில்லை; உலகம் இயற்கையாயிருக்கிறது, அது தோன்றி மாய்தலைச் செயற்கையாகச் செய்கிறது என்றே சொன்னோம்' என்று அவர்கள் சொல்லுவதுண்டு.

அதற்கும் இவர்கள், 'அப்படி உலகம் முத்தொழில் உடைமையானால், உலகம் செயற்படு பொருள் என்றே சொல்லி விடலாமே; அப்படிச் சொல்வதானால் அதற்குச் செய்வோன் ஒருவன் வேண்டும்; அதைத்தான் நாங்கள் தெரிவிக்கிறோம்; ஆனால், உங்களுக்குக் கடவுள் வேண்டும் என்பதில் கருத்தில்லையே' என்று சொல்லுவார்கள்.

மற்றொரு வகையான எண்ணமும் முன்றுவதாக அவர்களுக்கு உண்டாகிறது. 'உலகம், நிலம், நீர், தீ, காற்று என நாற்பொருள் உறுப்புகள் உடையதுதான்; அவையே தம்மைத் தோற்றிக்கொள்ளும்; இதனைச் செய்வதற்கு வேறொருவன் எதற்கு?'

'தோன்றுதல் நிற்றல் அழிதல் என்பவை தனக்கில்லாத தலைவன் ஒருவனே, ஏனையவற்றைத் தோற்றி நிற்பித்து அழித்தல் கூடும்; உலகம் தன்னைத் தானே அவ்வாறு செய்துகொள்ளுதல் இயலாது'

"மலங்கிளர் தோற்ற நாசம்
தனக்கிலா நாதன் வேண்டும்"

என்பது சித்தியார்.

இங்ஙனம் உலகாயதர் சிந்தனை மூன்றும், உலகத்துக்கு முத்தொழில் உண்மையை நிறுத்துவதற்கே வழியாயின.

புத்தர் :

இனி, புத்தரில் 'சௌத்ராந்திகர்' என்பார் ஒரு வகையார்; அவர்கள் சிந்தனையும் இங்கே கருதப்படுகிறது. அவர்கள், 'கணபங்கம்' என்னும் கருத்துடையவர்கள்.

'நொடிதோறும் எல்லாப் பொருள்களும் தோன்றி அழியும்; முன் அழிந்தது பின் தோன்றுவதற்குச் சார்பாய் இருக்கிறது; விதை அழிந்து அதன் சார்பில் முளை தோன்றுவது போல, உலகம் அழிந்துகொண்டே தோன்றிக்கொண்டே இருக்கின்றது. இஃது உலகத்தின் இயல்பு என்பது அவர்கள் கருத்து.

'சார்பினல் தோற்றமென்பது சார்பு முற்றும் அழியுமுன் தோற்றம் கூடி வருதலைக் குறிக்கும். ஆதலால், சார்புப் பொருள் இல்பொருள் அன்று; உள் பொருளே! முயல் கொம்பு என்பது உலகத்தில் இல்லாதது. அதிலிருந்து எதுவும் தோன்றுவது இல்லை. இது எல்லாரும் அறிந்தது.'

இப்படிச் சொல்லும்போது, மற்றொரு கேள்வியை அவர்கள் கேட்க நேரலாம்.

'சார்புப் பொருள் உள்பொருளாய் இருக்குமானல் அது தான் உள்ளதாய் இருக்கிறதே; அதற்குத் தோற்றம் எதற்கு? இருக்கிறபடியே இருக்குமே'.

ஓரளவு அழிந்துபோகும் அச் சார்புப் பொருளை இல் பொருள் என்றுங் கொள்ளாமல், உள் பொருள் என்றுங் கொள் ளாமல், 'இல்லதுமன்றி, உள்ளதுமன்றி, இன்ன நிலை என்பது மன்றிச் சார்புப் பொருள் இருக்குமென்றும், அதிலிருந்து பொருள்கள் தோன்றுமென்றும், சொன்னல் என்ன'

என்று புத்தரில் ஒரு சாராராகிய 'மாத்தியமிகர்' சொல்வர்

'அப்படிப்பட்ட ஒரு சார்பு உண்டென்பதானல் அதை யாவது உள்பொருள் என்றே கூறிவிடலாமே'

என்பார் அருணந்தி சிவம்.

ஆதலால், புத்தரில் சௌத்ராந்திகர், மாத்தியமிகர் என்னும் இருவர் கொள்கைகளும் பொருந்தி வருவதாக இல்லை.

சமணர் :

இனி, சமணர் கருத்துக்களைக் காணலாம்.

காரணம் காரியம் இரண்டையும் உள் பொருளாகவே ஏன் கொள்ளவேண்டும்? காரணப்பொருள் உண்டு, காரியப் பொருள் இல்லை என்பதே 'உண்டும் இல்லையும்' என்பதன் கருத்து. அப்படி உள்ளதும் இல்லதுமாய் ஒரு பொருள் உண்டென்றும் அதிலிருந்து தோற்றம் முதலியன உலகம் அடைகின்றதென்றும் ஏன் கொள்ளக்கூடாது?

என்று இவர்கள் சிந்திக்கின்றனர்.

'உள்ளதும் இல்லதுமென இரண்டியல்புகளாகச் சொல்லுவது மாறுபட்டனவாய் இருக்கின்றன. மாறுபட்ட இரண்டு தன்மைகள் எந்தப் பொருளுக்கும் இல்லையே; ஆதலால் அப்படிக் கூறுவதும் பொருந்தாது. காரணமாய் மூலப்பொருள் உள்ளது; அந்த உள்பொருளில் காரிய உலகம் நுட்பமாய் இருந்து பின்பு ஒரு வினைமுதலால் தோன்றுகின்றது என்று சொல்லலாமே'

என்று இவர்கள் எண்ணுகின்றனர். ஆதலால், புத்தர், சமணர் கொள்கைகளும் உலகியற்கைக்கு இங்ஙனம் வேருக உள்ளன.

உலகாயதர் அவரிற் சாருவாகர், புத்தரில் சௌத்திராந்திகர், மாத்தியமிகர், சமணரில் நிகண்டர் என்னும் புறப் புறச் சமயத்தார் கருத்துக்கள், மேல்மேல் சிந்தனைகளுக்கே இடமாக்கி நிற்கின்றன. இன்னும் சிந்தித்து முடிபு தேற வேண்டியிருக்கிறது. சிவஞான போதத்தின் முதல் நூற்பாவின் முதற் பிரிவு இச் சிந்தனையாளர்களையும் கடந்து செல்லுகிறது.

இனிப், புறச் சமயத்தாரை எடுத்துக்கொள்வோம்: மீமாம்சகர், தார்க்கிகர், சாங்கியர், ஏகான்மவாதியரும் பாஞ்சராத்திரியரும் தத்தம் கொள்கைகளாகக் கொண்டவையும் பொருந்துமாறில்லை

மீமாம்சகர்:

'மீமாம்சகர்' ஒரு கேள்வி கேட்கின்றார். 'உலகம் என்பது, ஆண் பெண் உடம்புகளும், அவை துய்ப்பதாக உள்ள ஏனைய உலகமும் என்று இருவகைப்படும். இவற்றுள், தோன்றுதலும் அழிதலும் உடம்புக்கு உண்டென்று தெரிகிறது. உலகத்துக்கு அப்படிக் காட்சியிற் காணவில்லையே;'

'உறுப்புக்கள் உடையனவெல்லாம் முத்தொழில் கொள்ளும்; உலகமும் நிலம் நீர் முதலிய உறுப்புகள் உடைய

தாதலால், உலகத்துக்கும் தோற்றக் கேடுகள் கூறவேண்டுமே' என்பார் மெய்கண்டார்.

அதற்குமேல், அவர்கள், வேறொரு கேள்வி கேட்கின்றனர். 'உலகத்தில் சில பொருள்கள் தோன்றி நின்று அழிதலைப் பார்க்கிறோம். ஆனால், உலகம் முழுதும் ஒருங்கே தோன்றி ஒருங்கே அழிதலை யார் பார்க்கிறார்கள் ?'

'ஒருங்கே அழியக்கூடிய காலம் வந்தால் முழுதும் அழிந்து விடும் என்பது, ஒரு சில ஒருசேர அழிந்துவிடுதலால், தெரிகிறதே!'

அதற்கு மீமாம்சகர், 'அப்படியானால், காலமே உலகத்தை ஒடுக்குகிறது; தோற்றுவிக்கிறது; காலத்தையே கடவுள் என்று கொள்ளலாமே' என்பர்.

'காலம்' என்பதும் அறியாமைப் பொருள்; ஆதலால், அது முடியாதே; தோற்றக் கேடுகளுக்கு அறிவுத் திறம் வேண்டுமே; ஆதலால், அறிவுடைய ஒரு தலைவன் இக் காரியத்துக்கு வேண்டும். காலம் முதலியவை அவன் காரியத் துக்குத் துணையாக வேண்டுமானால் இருக்கலாம்' என்பது இவர்கள் கருத்து.

> "காலமே கடவுளேவ
> லால் துணைக் காரணங்காண்"

என்று கூறி, அவர் சிந்தனைக்கு மேல் இவர்கள் செல்லுகின்றனர்.

தார்க்கிகர் :

'தார்க்கிகர்' என்பவர், இனித், தம் கருத்தைக் கூற முன் வருகின்றார்; புத்தரில் சௌத்ராந்திகரும், வைபாடிகரும், சமணரில் ஆசீவகரும் தார்க்கீகரைப் போலவே அணுக் கருத்தில் ஒத்து நின்று பேசுபவர்கள் ;

'வாதம்' செய்வது அறிவு விளக்கத்துக்கு நல்லது ; அறிவு வளர்ச்சியை அது உண்டாக்கும். 'விவாதம்' என்பது தாழ்ந்த கருத்தில் வரும்போது, அது, அறிஞரிடையிற் பொருந்தாது ; அறிவுக்குக் குறுக்காக அறியாமையிற் செல்லும் ; செருக்கினாற் பிறரை இகழ்ந்து மக்கள் தம்மைத் தாமே உயர்த்திக் கொள்வதற்கு விவாதம் முந்துகிறது!

இங்கே வரும் சமயச் சிந்தனையாளர் இருபத்து நால்வரையும் சைவ சித்தாந்தப் பெரியோர் இகழ்வாக எண்ணமாட்

டார்கள்; அவர்கள் சிந்தனைகளுக்கு இரங்குகிறவர்கள்; நன்றி யுடையவர்கள்! வாதம் செய்வார்களேயன்றி விவாதம் செய்ய மாட்டார்கள்; அவர்களெல்லாம் இயன்றது சிந்தித்து, மேல் சிந்தனைக்கும் உதவியாயிருந்து பையப் பைய முன்னுக்கு வருகி றவர்கள் என்றே கருதுவர்.

தார்க்கிகர், 'உலகத்துக்கு மூலம் அணுக்கள்; அணுக்கள் ஒன்று கூடி உலகமாய் உருவாகின்ற'தென்று கூறுவர். கன்மத் தால் உலகம் பலவேறு வகையில் வந்து நின்று ஒடுங்கும் என்றுங் கருதுவோர்.

கன்மமும் அணுவும் சடமாதலால் தாமே இயங்கா என்பது இவர்கள் கருத்து. மேலும், உலகம் ஒடுங்கும்போது அணுக் களும் ஒடுங்கிவிடுமே என்றும் இவர்கள் கருதுவார்கள்.

அணுக்களும் தமக்கு மூலமாகிய மாயையில் ஒடுங்கும் என் பதற்கு இவர்கள் ஒரு காரணம் காட்டுவார்கள்; 'அணு' என் பது காரியப் பொருள்; காரணப் பொருளன்று; அப்படி ஏன் சொல்லவேண்டுமென்றால், அணுவுக்கும் பிளப்பு உண்டு; விஞ்ஞானிகள் இப்போது அணுவையும் உடைத்து அதனுள் உடன்பாட்டு மின் எதிர்மறை மின், என்றெல்லாம் உறுப்புப் பிரிவுகள் காண்கிறார்கள். ஒன்று மற்றொன்றைச் சுற்றி வருவ தாகவும் கூறுகிறார்கள். முன்பே நம் பெரியவர்கள் இவற்றை அறிந்து, அணுக்களும் உறுப்புக்கள் உடையனவாயிருக்கின் றன என்றும், உறுப்புகள் கொண்டிருப்பதனால் அணுக்களும் காரியப் பொருள்களே என்றும், இயற்கையில் மாயை அவ்வாறு உறுப்புகளில்லாமல் ஒரே பொருளாக இருப்பதனால் அது காரணப் பொருள் என்றும், ஒருவர் அதனை உண்டாக்க வேண்டுமென்பதில்லை' என்றும் இவர்கள் துணிகிறார்கள்.

காரணப் பொருளாகிய மாயையில் இருந்து, காரியப் பொருளாகிய அணு தோன்றி, ஒன்றோடொன்று ஒட்டி உலகம் உண்டாகிறது, நிலைக்கிறது, ஒடுங்குகிறது; இப்படி முத்தொழி லும் உடையதாய் இருக்கிறது.

'உலகமும் மறைநூலும் இப்படித்தான் சொல்லுகின்றன. விதைகளும் விதைகளின் காரியங்களான மரம், கிளை, இலை இவைகளும் அணுக்களாய் மட்டும் ஒடுங்கும் என்றால், அணுக்கள் இங்கே நிலைபெற வேண்டும். அவை இல்பொருளாய் மறைந்து விடும் என்றால் மீண்டும் தோன்றுவதற்கு முறைமை இல்லை.

'முத்தொழில்கள் என்பவை மாயையினிடத்திலேதான் அமையும், மாயையில் ஒடுங்கி மாயையிலிருந்தே மீண்டுந் தோன்றுகின்றதென்பது உண்மையானால், 'உதிர்ந்த இலைகள்

தாமே மரங்களில் போய் ஒட்டிக்கொள்ளவேண்டும், தழைத்ததுபோல் தெரியவேண்டும், அப்படி அமைவதில்லையே' என்ருல், முதற்காரணமாகிய மாயையில் இலைகள் ஒடுங்கி, மீண்டும் உரிய காரணங்கள் அமையும்போது, நிமித்த காரணனுல் மரத்திலிருந்து மீண்டுந் தோன்றுதலே முறையாகும்'

என்பதும் இவர்கள் கருத்து.

இப்படிச் சொல்லும்போது, வேருெரு கேள்வியும் அவர்கள் கேட்கின்றனர். 'காரிய உலகமும் உளபொருளே என்பதனுல் உலகம் நிலையானது என்றே கொள்ளவேண்டும்; அதற்கு முத்தொழில் கூறுவதும், முத்தொழில் காரணமாகத் தோற்றுவிப்பான் ஒருவன் வேண்டுமென்பதும் எப்படி?'

செயலுக்கு வினைமுதல் வேண்டுமாதலால், அவர்கள் சொல் பொருந்தவில்லை;

ஆதலால், சைவ சித்தாந்தமுணர்ந்தோர் இச் சிந்தனைகளையுங் கடந்து மேலுஞ் செல்வர்.

சாங்கியர் :

இனிச் 'சாங்கியர்' கருத்துக்கள் கருதுதற்குரியன. அவர்கள், தலைவன் ஒருவன் வேண்டுமென்று கருதாதவர்களாய் இருக்கிருர்கள்.

'உயிர்க்கு மாயையே உடம்பு முதலியவற்றைக் கொடுக்கிறது; இது மாயையின் செயல்; இதற்குத் தலைவன் எதற்கு?'

என்பது அவர்கள் கொள்கை.

'மாயைக்கு அறிவு கிடையாதே; உயிர்களும் சிற்றறிவு உடையனவாய்த் தாமே உடல் முதலியவைகளைத் தெரிந்து பெறக் கூடாதனவாய் இருப்பதை உலகத்தில் பார்க்கிருேமே; ஆதலால் இவை இரண்டுக்கும் வேருக இறைவன் வேண்டும்,'

என்பது இவர்கள் கருத்து.

'காரணங்களில் முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்று வகை இருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். குடம் என்னும் காரியத்துக்கு மண் முதற்காரணம், சக்கரம் துணைக் காரணம், குலாலன் நிமித்த காரணம்; இங்ஙனமே உலக காரியத்துக்கும் மாயை முதற்காரணம், அருட்சத்தி துணைக் காரணம், கடவுள் நிமித்த காரணம் என்று கொள்ளவேண்டும்' எனவும் இவர்கள் கூறுவர்.

மாயாவாதியர் :

இனி, 'மாயாவாதிகள்' என்போர் தம் கருத்தைக் கூறுகின்றனர்.

'அருவமாகிய மாயையில் உருவமாகிய உலகம் தோன்ருது; திரிபின்மையிலிருந்து திரிபுகள் தோன்றுவதில்லே' என்பது அவர்கள் சிந்தனே;

அதற்கு 'அருவப் பொருளிலிருந்து உருவப் பொருள் ஏன் தோன்ருது? ஆனல், உங்கள் கொள்கை, அருவமாய் உள்ள வானத்திலிருந்து மண் முதலான உருவப்பொருள் தோன்றும் என்பதுதானே; அப்படியிருந்தும் அருவத்தில் உருவந் தோன்ருது என்று எப்படிக் கூறுகிறீர்கள்' எனவும்,

'வெட்டவெளியாகிய வானத்திலிருந்து நீர் உருவாகிய மேகத்தின் அசைவும் ஒளி உருவாகிய மின்னலின் வீச்சும், ஒலி உருவாகிய இடிகளின் முழக்கமும் தோன்றுதல் இயல்பன்ருே! எல்லாத் தோற்றங்களுக்கும் மூலமாய் உள்ள மாயை என்பதும் ஓர் அருவப் பொருளே என்னும் உண்மையையும் நினேக்க வேண்டியிருக்கிறது' எனவும் இவர்கள் தெளிவிப்பார்கள்.

சிவஞான போதத்தின் முதல் நூற்பாவில் மூன்று பிரிவுகள் உண்டு என்பதை முன்பு பார்த்தோம். முதறபிரிவின் மூலம், 'உலகாயதர், சாருவாகர், சௌத்ராந்திகர், மாததியமிகர், நிகண்டர், ஆசீவகர், மீமாப்சகர், மாயாவாதியர், நையாயிகர், சாங்கியர் முதலியோர் சமயங்களின் சிந்தனேகளெலலாம் இவ்வாறு ஆராயப்பட்டன.

ii

சிவஞான போதத்தின் முதல் நூற்பாவின் இரண்டாம் பிரிவினே இனிப் பார்ப்போம்;

உலகம் என்பது, மாயையிலிருந்து ஒருவனுல் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள் என்றும், உலகத்தை அதன் மூலமாகிய மாயையில் கன்ம மலப்படி அரன் ஒடுக்குவான் என்றும், அப்படி ஒடுக்கும் நிமித்த காரணனுகிய கடவுளிடத்திலிருந்து ஆணவ மலம் பக்குவப்படும் பொருட்டு மீண்டும் அது தோன்றுகின்றது என்றும் அது கூறுகின்றது.

இக் கருத்துக்களிலும், நூற்பாவின் முதல் பிரிவிற் கூறப்பட்ட சமயச் சிந்தனேகளுக்கு விடைகள் உண்டு.

பாஞ்சராத்திரியர் :

மேலும், 'பாஞ்சராத்திரி' முதலியோர், 'படைக்குங் கடவுளாகிய நான்முகன் முதலியோரில் ஒருவரே உலகத்தை ஒடுக்கக் கூடுமே' என்பார்கள்.

'உலகத்தைக் கடைசியாக ஒடுக்குவோர் யாரோ, அவரிடமிருந்தே மீண்டும் உலகம் தோன்றவேண்டும்; அவரே அரன் என்பவர்'

என்று இவர்கள் கூறுவார்கள். 'அரன் ஏவலால் படைக்குங் கடவுள் முதலியோர் செயல்படுவார்கள்; அவர்களையெல்லாம் முதல்வன் என்பது பொருந்தாது'

என்பதும் இவர்கள் கருத்து.

பரிணும வாதியர் :

கடவுளே பரிணமித்து உலகம் தோன்றுகிறது என்று பரிணுமவாதிகள் கூறுவர்.

ஒடுக்குங் கடவுள் நிமித்த காரணனுக இருந்து மாயையிலிருந்து உலகத்தைத் தோற்றுவிப்பான் என்னுங் கருத்தினுல், இப் 'பரிணுமவாதி'களின் எண்ணமும் பொருந்தாததாய் இருக்கிறது.

சிவாத்துவிதர் :

மாயையும் முதல்வனே, முதல்வனுக்கு மாயை வேறு பொருளன்று; என்று சிவாத்துவிதர் கூறுவர் பாஞ்சராத்திரிகளும் இக் கருத்துடையவர்கள். மாயை அறியாமைப் பொருளாதலால் அது முதல்வனுகாது என்பது இவர்கள் நினைவு.

அதனுல், அகப்புறச் சமயத்தாராகிய 'உற்பத்திவாதி' (மாவிரதர்), 'ஆவேசவாதி' (காபாலிகர்)கள் கருத்துக்களும் இங்குப் பொருந்துவதாயில்லை.

இங்ஙனம், பாஞ்சராத்திரியர், பரிணுமவாதியர், சிவாத்துவிதர் முதலியோர் சிந்தனைகள் இவ் விரண்டாம் பிரிவில் ஆராயப்பட்டன.

iii

இனிச், சிவஞான போதத்தின் மூன்றும் பிரிவு வருகின்றது. ஒடுக்குங் கடவுளாகிய அரனே தோற்றுவிக்குங் கடவுளுமாவான். கடவுள் என்பவர் ஒருவரேயாதலின் அவரே முதல்வர் என்றும் இது தெளிவுபடுத்துகிறது.

'முதற்கடவுள் ஒருவர் என்பது என்ன? உலகம் மிக வியக்கத்தக்கதாக ஆக்கப்பட்டிருப்பதனுல், அதற்குக் கடவுளர் பலர் வேண்டுமே'

என்று அநேகேசுர வாதியர் சிந்திப்பர்.

'அப்படி உலகம் பலரால் செய்யப்பட்டாலும் அவர்கள் எல்லாருமே கடவுளாக மாட்டார்கள்; கடவுள் ஏவலால் அவர்க ளெல்லாரும் நடப்பவர்கள்; அப் பலரும் சுட்டுணர்வினர்; திருமால் நான்முகன் முதலியோரும் அத்தகையவரே; கடவுள் இலக்கணத்துக்கு அவர்களெல்லாரும் வேறுபட்டவர்கள்; கடவு ளிலக்கணம் ஒருவரையே குறிக்கும்; இலக்கணத்தில் வேற் றுமை இல்லாவிட்டால், அதன் இலக்கியமாக உள்ள பொருளை ஒன்றென்றே கூறலாம்; கடவுட் பெயர், பலர்க்குச் செல்லாது' என்பது இவர்கள் கருத்து.

சிவசமவாதியர் : சிவசங்கிராந்தவாதியர் :

ஆன்மாக்கள் வீடுபேற்று நிலையில் சிவத்துக்குச் சமமாய்ப் பொருந்துதலால், 'கடவுளும் உயிர்களும் ஒன்றே' என்று, 'சிவ சமவாதி' 'சிவசங்கிராந்தவாதி' என்னும் அகச் சமயத்தார் சிலர் சிந்திப்பர்; இவர்கள் சிந்தனைகளும் இம் மூன்றும் பிரிவுக் கருத்துக்குப் பொருந்துவதாயில்லை.

இங்ஙனமெல்லாம் நால்வகைச் சமயச் சிந்தனையாளர் களின் கருத்துக்களும், அவற்றைக் கடந்ததாயிருக்கும் சைவ சித்தாந்தத்தின் மெய்ப்பொருளைத் தேறுவதற்கே துணை செய்கின்றன.

சிவஞான போதத்தின் முதல் நூற்பாவைப் பற்றிய ஆராய்ச்சி இதனுடன் முடிவடைகிறது.

தொகுப்பு

சைவ சித்தாந்தம் என்பதற்குச் சிவஞான போதம் முதன்மையான நூல். அது, தருக்க முறையில் இலக்கண அமைதிகளுடன் சுருக்கமாய் இயற்றப்பட்டிருக்கிறது.

உள்ளது சிறத்தலாகிய சற்காரியவாதம் என்பது, சார்ந்த தன் வண்ணமாய்ச் சிறப்பதும், இரண்டற்ற கலப்பினுல் எல்லாம் நிறைவதுமாக முறையே மலங்கள், உயிர்கள், கடவுளினியல் புகள் விளங்குகின்றன.

சிவஞானபோதத்தின் கடவுள் வாழ்த்து, கல்லால நிழலில் இருந்து முனிகணங்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு

ஆகிய நான்மறை ஒளிநெறியை ஊட்டிய தென்முகக் கடவுள் மேல் வருகின்றது.

அவை யடக்கத்தால் மெய்கண்ட தேவரின் உள்ளத் தெளிவும் வீரமும் விளங்குகின்றன.

சிவஞான போதத்தின் முன் ஆறு நூற்பாக்கள் அறி வாராய்ச்சிக்கு வகை செய்கின்றன; பின் ஆறு நூற்பாக்கள் அருள் திளைப்புக்கு விளக்கமாய் அமைந்துள்ளன.

சிவஞான முனிவரின் உரை, மெய்கண்ட தேவரின் கருத் தோடு ஒத்திருக்கின்றது; நூற்பாக்களும், வார்த்திகப் பொழிப் புரையும், ஏதுக்களும், எடுத்துக் காட்டுகளும் மெய்கண்ட தேவரே உரைத்தவை! சுருக்க நூலாதலின் இவ்வாறெல்லாம் அவரே செய்தார்.

முதல் நூற்பா மூன்று பிரிவுகள் உடையது. முறையே, உலகம் முத்தொழில் உடையதென்றும், நிமித்த காரணனாகிய அரனே அதற்குக் காரணனென்றும், அதனால் உலக முதல்வன் அப் பெருமானே என்றும், கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

இவை, ஏதுக்களாலும், எடுத்துக்காட்டு வெண்பாக்க ளாலும் உறுதி செய்யப்படுகின்றன. இருபத்துநான்கு வகைச் சமயங்களுக்கும் அப்பாற்பட்டது சைவ சித்தாந்தம். வேதாந் தம் என்பதும் சைவ சித்தாந்தம் என்பதும் ஒரு காசின் இரு பக்கங்களைப் போல் அறிவாராய்ச்சிக்கும் நுகர்வுக்கும் உரியன வாய் முன் பின் அமைவன. எளிதாதலால், அறிவாராய்ச்சி பலரிடம் பரவியுள்ளது. அரிதாதலால் அருள் திளைப்பு, சிலரிடமே விளங்குகிறது; சித்தாந்தம் அத்தகையது.

முதல் நூற்பாவிலேயே கடவுளும் உயிரும் மும் மலங்களும் தெளியப்படுமாயினும், அவற்றில் முதன்மையானது கடவு ளுண்மையாதலின், அதனை எடுத்துக் கூறுவதாக இம் முதல் நூற்பா அமைந்திருக்கின்றது. இரு திணை, ஐம்பால், மூவிடம் முதலிய இலக்கணங்களும் அம் முதல் நூற்பாவில் வருகின்றன.

'அவன்' 'அவள்' என்று கூறுவதனால், ஆண் பெண் உயிர் களும் குறிக்கப்படுகின்றன.

முதல் நூற்பாவில் தொழில் வகையும், அதனைச் செய்யும் தொழிலின் வினை முதலாகிய கடவுளும், அக் கடவுளின் தொழில்களில் முக்கியமாய் அழிப்பும் அறியப்படும். கடவுளைப் போல் உயிர்களுக்குப் பயன்படும் வகையில், 'கைவினை' செய்து

வாழ்தலே அறம் செய்தலாகும்; கடவுளைச் சார்ந்து அவன் வண்ணமாய் இணங்குதலுமாகும்.

உலகம் ஒடுங்கும்போது முடிவில் எல்லாம் நாதமாகின்றது. அது தூய மாயையைச் சேர்ந்தது. இறைவனுக்கு அது உரிமையான இடம்; அதன்பின் அது, உயிருணர்விற் பரநாதமாய் அருள் வண்ணமாகும். அந் நாத ஒலி கொண்டே பெருமானும் ஐந்தொழில்களைப் புரிகிறான்.

பக்குவம் வாய்ந்த உயிர்கள் அதனால் மலப் பிணிப்பு நீங்கி இறைவனிடம் ஒடுங்கி இன்புறுகின்றன; மற்ற உயிர்கள் மலங்கள் பக்குவப்படும் பொருட்டுப் பிறவிக்கு வருகின்றன. பிறவிக்கு வரும்போது கன்மத்தாற் பலவகையான மாறுதல்களை அடைகின்றன.

இறைவனைச் சேரும் உயிர்கள், அவன் எண்குணங்களை எய்தி அதனால் மலங்களின் குணங்களைக் கடக்கக் கூடும்.

இவ் விளக்கங்களுக்கு உதவும் சிந்தனைகளாக 'உலகாயதம்' முதலிய சமயக் கருத்துக்கள் படிமுறையில் அமைந்துள்ளன. ஒவ்வொரு வகையான கருத்துக்களை அவை உடையன.

முக்கியமாய் வகைப்படுத்தினால் முதல் நூற்பாவின் கருத்துக்கள் பின்வருமாறு கொள்ளப்படும்.

உலகம் உறுப்புக்களோடு கூடியிருப்பதனால், அது தோற்றம் நிலை இறுதி என்னும் முத் தொழில்களை உடையதாயிருக்கிறது; உலகத்தில் சில பொருள்களின் தோற்றக் கேடுகள் காட்சி அளவைக்கே புலப்படுகின்றன. இதனால் உலகம் நிலையானது என்னும் 'உலகாயதர்' 'மீமாமசகர்' முதலியோர் சிந்தனைகள் பொருத்தமில்லாமற் போகின்றன.

'உலகம் தோன்றி அழியும் எனவே கொண்டாலும், அது, ஏதோ ஒரு சார்பில் தோன்றி நின்று அழிகின்றது என்று தெரிகிறது; அது அதற்கு இயல்புதான்' என்னும் புத்தரின் சிந்தனையும் சார்பு' என்பதும் மாயையின் கூறே யாதலால், பொருந்தவில்லை; உள்பொருளாகிய மாயையிலிருந்தே முத்தொழில் கொண்டு உலகம் தோன்றுகிறது என்று கொள்ளவேண்டும்.

'அப்படி உள்பொருளிலிருந்தே உலகம் தோன்றினாலும், நான்முகன் முதலிய கடவுளரில் ஒருவரே அதனைத் தோற்றுவிப்பர்' என்று பாஞ்சராத்திரிகள் கூறும் கருத்து, ஒடுக்குங் கடவுள் அவராகாமையால் மாறுபடுகின்றது.

(தொடரும்.)

செய்திகளும் குறிப்புகளும்

நாகைத் தமிழ்ச்சங்க விழாக்கள்

நாகைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 19-12-76 இல் நான்கு பெரும் புலவர்களின் நூற்றாண்டு விழாவும், தமிழ்ச் சங்க அரங்கம் திறப்பு விழாவும் சிறப்புற நடைபெற்றன.

நாகையில் நிறுவப்பட்டுள்ள மறைமலையடிகளார் முழு உருவ வெண்கலச் சிலை மேடையைச் சுற்றி இரும்புக் கலைச்சுற்று ஒன்று 3500 ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மேடை "தமிழ்ச் சங்க அரங்கம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் தாமரைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் முன்னிலையில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

அடுத்துக் குமரன் திருமண மண்டபத்தில் குன்றக்குடி அடிகளார் தலைமையில, மறைமலையடிகளார், நாவலர் சோமசுந்தரபாரதியார் தமிழ் முனிவர் கா. நமச்சிவாய முதலியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆகிய நூற்றாண்டுப் புலவர்கட்கு விழா சிறப்பாக நடைபெற்றது. நாகைத் தமிழ்ச் சங்க அமைச்சர் கவிஞர் கோவை இளஞ்சேரன் அவர்களின் பணிச் சிறப்புகள் பற்றி முத்தமிழ்க் காவலர் பாராட்டிப் பேசினார். "தமிழ்ச் சங்க அரங்க"ச் சுற்றுவேலியை அமைத்துத் தந்த சென்னைப் பனியகாட் நிறுவனப் பொறுப்பாட்சியாளர் திரு. இராம சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கட்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. புலவர் இரா. அரங்கராமானுசம் எம். ஏ. அவர்கள் நன்றி கூறினார்கள்.

நெய்வேலி, உலகத் தமிழ்க் கழகத்தின் முப்பெருவிழா

நெய்வேலி, உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் 22, 23-1-77 ஆம் நாள்களில் நெய்வேலி நகர்க்கூறு 24 இல் உள்ள கலையரங்கில், முறையே திருவள்ளுவர் பிறந்த நாள் விழா, பொங்கல் விழா, தமிழ்க்கடல் மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா ஆகிய முப்பெருவிழாக்கள் சிறப்புற நடைபெற்றன. 22-1-77 இல் திருக்குறள் பதின் கவனகர் (தசாவதானி) பெ. இராமையனார் அவர்கள் தலைமையில் திருக்குறள் பேச்சுப் போட்டி, பாட்டரங்கம் முதலியன நடைபெற்றன. அறிஞர்கள் பலர் உரையாற்றினர். கழகப் புலவர் திரு. இறைக்குருவனார் சிறப்புரை ஆற்றினார். 23-1-77 இல் முறையே திரு அ. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் பொங்கல் விழாவும், திரு. மூ. சு. மணி, க. இ. அவர்கள் தலைமையில் மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவும் சிறப்புற நடைபெற்றன.

நெல்லைச் சுந்தர ஓதுவா மூர்த்தி திருமுறை மன்றம்

நெல்லைச் சுந்தர ஓதுவா மூர்த்தி திருமுறை மன்றத்தின் 5 ஆவது திருமுறைக் கூட்டம் 30-1-77 ஞாயிறு அன்று திருநெல்வேலி டவுன் வர்த்தகர் தர்மபரிபாலன சங்க மாடியில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ம. சிவசம்பு வரவேற்புரை ஆற்றினார். தருமபுரம் சிவத்திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் "சுந்தரர் வரலாறும் அற்புதப் பதிகங்களும்" என்ற தலைப்பில் பேசினார். திரு. மூ. சு. சங்கர் நன்றி கூறினார்.

மதுரைத் திருவள்ளுவர் கழக விழாக்கள்

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் சனவரி 14, 15, 16 ஆம் நாள்களில் முறையே தமிழர் விழா, திருவள்ளுவர் விழா, அறிஞர் பாராட்டு விழா ஆகியன மிகச் சிறப்பாக நடைபெற்றன.

14-1-77 இல் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் நினைவு விழா திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். மற்றும் அறிஞர் பலர் திரு. இராசன் அவர்களின் சிறப்புப்பற்றி உரையாற்றினர்.

15-1-77 இல் தெய்வப் புலவர் திருவள்ளுவர் விழா திரு. லெ. அழகுசுந்தரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் உரையாற்றினர். அன்று இரவு 7 மணியளவில் வள்ளல் திரு. ச. வெள்ளைச்சாமி நாடார் அவர்கள் தலைமையில் பல அரிய பொருள்கள்பற்றி அறிஞர் பலர் சொற்பொழிவாற்றினர். இவ் விழாவினை யொட்டித் திருவள்ளுவர் வழிபாடு, திருக்குறட் கவியரங்கம் ஆகியனவும் நடைபெற்றன.

16-1-77 இல் அறிஞர் பாராட்டு விழா, ஞானபீடம் பரிசுபெற்ற புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் திரு. அகிலன் அவர்களைப் பாராட்டு முகத்தான், மதுரை மாவட்ட ஆட்சியாளர் திரு. K. A. சுந்தரம் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திரு. பி. டி. கமலத்தியாகராசன் அவர்கள் திரு. அகிலன் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர்.


மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் உ௪அ ஆம் பக்கத் தொடர்ச்சி)

1977 சனவரித் திங்கட்குக் கழக ஆட்சியாளர் நன்கொடை	ரூ. 100	00
நூலகர் இளையமகள் செல்வி வள்ளி (7-2-77)	5	00
அடிகள் இளையமருகர் புலவர் வை. குஞ்சிதபாதம் பிள்ளை	100	00
கழகச் செயற்குழு உறுப்பினர் திரு. மு. முத்துராமலிங்கம் பிள்ளை	25	00
முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்	15	00
திரு. டி. என். செகந்நாதன் செட்டியார் (திருச்சிக்கிளை வழி)	5	00
திரு. சுப. அருணாசலஞ் செட்டியார் ,,	11	00
விருதுநகர் பாண்டுரங்கன் கம்பெனி	50	00
வேடசெந்தூர் (ஐ. ஓ. பி) திரு. பி. துரைசாமி	10	00
திருச்சி திரு. சி. முத்தையா (அரசினர் மண்டப அச்சகம்)	5	00
திரு. மு. பாலசுப்பிரமணியன் (மீன்துறை) அவர்களின் இளையமகன் ஞானசேகரன் (4-2-77)	5	00

வேண்டுகோள் : இம்முறையில் தமிழ்ப் புலவர்களும், பேராசிரியர்களும், மற்றும் அன்பர்களும் தங்கள் இல்லத்தார் பிறந்தநாள் விழாக்களிலும், மணவிழாக்களிலும் நூல்நிலைய வளர்ச்சிக்குத் தக்க நன்கொடை வழங்கிப் புகழ்பெறுவார்களாக!

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.



கடந்த 50 ஆண்டுகளில் செந்தமிழ்ச் செல்வி ஆற்றிய அரும்பெரும் பணிகள் பற்றி அறிஞர்கள் தொகுத்துள்ள புகழ் மாலைகளும், பேராசிரியப் பெருமக்கள் புலவர்கள் எழுதியுள்ள இலக்கண இலக்கிய, சமுதாய இயல் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. சுருங்கச் சொல்ல வேண்டுமானல் இம் மலர் அரியதொரு கருத்துக் கருவூலமாகவும் ஒரு திறனாய்வு மலராகவும் திகழ்கிறது எனலாம். வண்ண முகப்புடன் கூடிய அழகிய மலராகவும், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் சீரிய செந்தமிழ் மலராகவும் திகழும் இதனைத் தமிழ் அன்பர்களும், பொது நூலகங்களும் வாங்கிச் சுவையும் பயனும் காண்பார்களாக.

படங்களுடன் கூடிய அரிய படைப்பு

பக்கங்கள் : 288 விலை ரூ. 7-50

பதிவு எண் : M. 4899



இம் மலரில் பேராசிரியர்களும், கவிஞர்களும், அடிகளாரைப் பற்றி எழுதிய அரிய கட்டுரைகளும் கவிதைகளும் உள்ளன. அடிகளாரின் பல்துறை ஆற்றல்களைச் சித்திரிக்கும் பாமாலையும், அடிகளாரின் உலகியல் திறன், தனித்தமிழ்த் தொண்டு, ஆய்வுத் திறன், இலக்கிய வரலாற்றுத் திறன், நாடகத்திறன், திருக்குறள் ஆராய்ச்சித் திறன், கவிதை ஆய்வுத்திறன், நூல் படிக்குந்திறன், அவர்தம் சான்றாண்மை, ஆசிரியத்திறன், அவர் நாட்குறிப்பு எழுதுந்திறன் ஆகிய செய்திகளும் மிக விளக்கமாகவும் நுணுக்கமாகவும் கூறப்படுகின்றன. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இம் மலர் அடிகளாரின் வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து படம் பிடித்துக் காட்டும் அரியதொரு திறனாய்வு சிறப்பு வெளியீடாகத் திகழ்கிறது எனலாம். அத்துடன் அடிகளாரின் திருவுருவப் படங்கள் ஆங்காங்கே சேர்க்கப்பட்டு அழகிய வண்ண முகப்புடன் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் மலராய் விளங்குகிறது. தமிழன்பர்கள் இல்லங்கள்தோறும் இருக்கவேண்டிய அழகிய மலர்.

படங்களுடன் கூடிய அழகிய படைப்பு
பக்கங்கள் : 356 விலை ரூ. 10/-

அப்பர் அச்சகம், சென்னை-1.